




வாராந்த மின்னிதழ்



உண்மையின் முகம்

# கல்முனை NET

kalmunainet.com

e paper








தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்

பிலவ வருடம் ஆனி 05 [19.06.2021] இதழ் : 21


# கிழக்கில் 241 பேர் உயிரிழப்பு

## 12000 இற்கும் மேல் தொற்று

(நமது நிருபர்)

கிழக்கு மாகாணத்திற்கென வழங்கப்பட்ட 75 ஆயிரம் சைனோபாம் தடுப்பூசிகளில் 70ஆயிரத்து 450 ஊசிகள் நேற்று (18) வெள்ளி வரை ஏற்றப்பட்டுள்ளதென கிழக்கு மாகாண சுகாதார திணைக்கள பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர். எம்.தௌபீக் தெரிவித்தார்.

மட்டு. மாவட்டத்தில் 22483 பேருக்கும்அம்பாறைபிராந்தியத்தில் 23437 பேருக்கும் திருமலை மாவட்டத்தில் 23921 பேருக்கும் செலுத்தப்பட்டுள்ளன.

கல்முனைப் பிராந்தியத்திற்கு இன்னும் தடுப்பூசி செலுத்தும் பணி ஆரம்பிக்கப்படவில்லை.

அதற்கான முன்னாயத்தவேலைகள் சகல சுகாதாரப் பிரிவுகளிலும் எடுக்கப்பட்டு 02

# பயணக் கட்டுப்பாடுகள் 21 இல் தளர்வு

## சுகாதார வழிமுறைகளில் மாற்றமில்லை



நாடுமுழுவதும் அமுலில் உள்ள பயணக் கட்டுப்பாடு எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 4 மணிக்கு நீக்கப்படவுள்ளதாக இராணுவ தளபதி ஜெனரல்ஷவேந்திரசில்வாதெரிவித்துள்ளார்.

23 ஆம் திகதி இரவு 10 மணி வரையில் இவ்வாறு பயணக் கட்டுப்பாடு நீக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மீண்டும் 23 ஆம் திகதி இரவு 10 மணி முதல் 25 ஆம் திகதி அதிகாலை 4 வரையில் பயணக் கட்டுப்பாடு 02

# மா. ச. தேர்தல் நடத்துவதில் இந்தியா கூடுதல் அக்கறை



நமது நிருபர்

இலங்கை தமிழர் பிரச்சினையில்இந்தியாஇன்னும் கூடுதல் அக்கறை கொண்டுள்ளதென்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது என புளொட் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

தமிழர் பிரச்சனையில் இந்தியா ஆர்வமாக இருக்கிறது என்று தெரிவித்த அவர், இந்தியா ஒருபோதும் எங்களைக் கைவிடாது என்ற நம்பிக்கை இருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்பிக்கள் நேற்று முன்தினம் (வியாழனன்று) 02

# மாகாண சபைகளை வெற்றுப் பொருளாக்குவதே அரசுகளின் இலக்கு!



நமது நிருபர்

உயிர்த்தியாகங்களினால் உருவான மாகாண சபைகளுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கு மறுதலித்து வரும் சிங்கள, பேரினவாத அரசுகள் தற்போது மருத்துவம் மற்றும் கல்வி அதிகாரங்களையும் பறிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் செயலாளர் சிவசக்தி 02

# அக்கரைப்பற்றில் 29 பேர் கைது!

நமது நிருபர்

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் பயணத் தடையை மீறி சட்ட விரோதமாக வீதியில் நடமாடிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட 29 நபர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக, அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய சமூக பொலிஸ் 02

# ட்ரோன் கமராக்கள் ஊடாக கடுமையான கண்காணிப்பு

## சுற்றி வளைப்புக்களில் ஆயிரக்கணக்கானோர் கைது

வார இறுதி நாட்களில் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாக செயற்படும் நபர்களைக் கைது செய்வதற்காக விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதன் போது சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்பிலுள்ள தோட்டப்புறங்கள் 02

# சூரிய மின்சக்தி திட்டம்: இந்தியா இலங்கைக்கு 100 மில். டொலர் உதவி

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைத் திட்டத்துக்கு அமைய, சூரிய சக்தியிலான மின் உற்பத்தியை அதிகரித்து, தேசிய மின் கட்டமைப்புக்கு மீள்பிறப்பாக்கச் சக்திவளப் பங்களிப்பை அதிகரிக்கும் திட்டத்தை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்காக, இந்திய 02

# காத்தான்குடியில் 18 கடைகளுக்கு சீல்

காத்தான்குடியில் பயணத்தடையை மீறி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட 18 வர்த்தக நிலையங்களுக்கு தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் சீல் வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

காத்தான்குடி பிரதான வீதி உட்பட உள் வீதிகளில், பொலிஸார், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், இராணுவத்தினர், நகர சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் இணைந்து மேற்கொண்ட திடீர் 02


# மட்டு. இளைஞன் சடலத்தை தோண்டி எடுக்க உத்தரவு

நமது நிருபர்

பொலிஸாரால் கைதாகி அவர்களது கட்டுப்பாட்டில் இருந்த வேளையில் உயிரிழந்த விதுஷனின் உடலை தோண்டி எடுத்து, மீளவும் பிரதே பரிசோதனைக்கு உட்படுத்துமாறு மட்டக்களப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஜூன் 03 ஆந் திகதி சந்திரன் விதுஷன் எனும் இளைஞன் ஐஸ் போதை பொருள் வியாபாரம் செய்வதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சுமார் இரவு 10.45 மணியளவில் கைதுசெய்யப்பட்டுமட்டக்களப்புதலைமையக பொலிஸ் காவலில் இருந்த 02

# கம்மன்பிலவுக்கு எதிரான தீர்மானம் 22ல் சபாநாயகரிடம்



நமது நிருபர்

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினால் பாராளுமன்றத்தில் கொண்டுவர தீர்மானிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லா தீர்மானம், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (22) சபாநாயகரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக, எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலையை அதிகரிக்க எடுத்த தீர்மானத்திற்கு அமைய, மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாக்குறுதி மீறப்பட்டுள்ளதாகவும், அதன் அடிப்படையில் குறித்த பதவியில் அவர் இருப்பதற்கு உரித்துடையவர் அல்ல என, 10 காரணங்களை முன்வைத்து, ஐக்கிய மக்கள் சக்தியினால், விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரான உதய கம்மன்பிலவுக்கு 02

# அதிகாரிகளுக்கு ஜனாதிபதி கடும் அறிவுறுத்தல்

நாட்டில் எதிர்வரும் 21 ஆம் திகதி போக்குவரத்து கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவுள்ள நிலையில், அரச மற்றும் தனியார்த்துறை நிறுவனங்கள் மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர்களைக் கொண்டு செயற்பட வேண்டும் என்றும், வர்த்தக மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் குறைந்தளவான நபர்களின் பங்குபற்றலுடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

கொவிட் ஒழிப்புக்கானவிசேட குழு நேற்று (18) வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் ஒன்றுகூடிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இதன் போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, எதிர்வரும் 21 ஆம் திகதி அதிகாலை 4 மணி முதல் பயணக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள போதிலும், மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடுகளை தளர்த்தாதிருக்க வேண்டும்.

அத்துடன், மக்கள் ஒன்றுகூடும் நிகழ்வுகளுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள், தொடர்ந்தும் அதேபோன்று நடைமுறைப் படுத்தப்படும். 02

## யாழில் திருமண நிகழ்வில் பங்கேற்றவர்களுக்கு நேர்ந்த கதி!

நமது நிருபர்

யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய், பண்டத்தரிப்பு பகுதியில் அண்மையில் நடைபெற்ற திருமண நிகழ்வில் பங்கேற்றிருந்த 13 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

கடந்த 4ஆம் திகதி, பண்டத்தரிப்பு பகுதியில் சுகாதார பிரிவின் அறிவுறுத்தல்களை மீறி திருமண நிகழ்வில் பங்கேற்ற அனைவரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

தனிமைப்படுத்தப்பட்ட 78 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட பீ.சீ.ஆர்.பரிசோதனையில் 13 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

தொடர்ந்து தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட 13 பேரும் தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் மணமக்கள் குடும்பத்தினர் மேலும் 14 நாட்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## மதுபான நிலையங்கள் மூடப்பட்டதனால் 1500 கோடி ரூபா நஷ்டம்?

நமது நிருபர்

கோவிட் பெருந்தொற்று காரணமாக மதுபான விற்பனை நிலையங்கள் தொடர்ச்சியாக மூடப்பட்டிருப்பதனால் நாள் ஒன்றுக்கு500மில்லியன்ரூபாநட்டம்ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, இந்த பயணத்தடை காலத்தில் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள மொத்த வருமான இழப்புத் தொகை ஆயிரத்து

ஐநூறு கோடி ரூபா என மதுவரித் திணைக்கள வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இணைய வழியாக மதுபானங்களை விற்பனை செய்வதற்கு நிதி அமைச்சு அனுமதி வழங்கிய போதிலும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். இதனைத் தொடர்ந்து மதுபான விற்பனைக்கான அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## காத்தான்குடியில் 18...

சோதனையின்போது பயணத்தடையை மீறி வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 18 வர்த்தக நிலையங்களுக்கே சீல் வைக்கப்பட்டன.

காத்தான்குடி பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் எம்.எம். ஜவாகிர், சுகாதார வைத்தியதிகாரி பணிமனை பொதுச்சுகாதாரபரிசோதகர்கள், இராணுவத்தினர் நகர சபை உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் உட்பட பலரும் இந்நடவடிக்கையில் பங்கு கொண்டிருந்தனர்.

## கிழக்கில் 240 பேர் உயி...

வருகின்றன.

கிழக்கு மாகாணத்தில் நேற்று(18) வரை கொரோனாவுக்கு 241 பேர் பலியாகியுள்ளனர். இவர்களில் 215 பேர் மூன்றாவது அலையில் மரணித்தவர்களாவர். திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை 121 பேர் மரணித்துள்ளனர்.

கிழக்கில் இதுவரை மரணித்த 241 பேரில் திருகோணமலை மாவட்டத்தில் அதிகூடிய 121 பேரும் அம்பாறைப் பிராந்தியத்தில் 24 பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 65 பேரும் கல்முனைப்பிராந்தியத்தில் 31 பேரும் மரணித்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் இதுவரை 12243 பேருக்கு கொறொனாத்தொற்று ஏற்பட்டுள்ளது. இவர்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 4356 பேரும் திருகோணமலை 3944 பேரும் அம்பாறைப் பிராந்தியத்தில் 1819 பேரும் கல்முனைப் பிராந்தியத்தில் 2124 பேரும் தொற்றுகுள்ளாகியுள்ளனர்.

## பயணக் கட்டுப்பாடுகள் 21...

அமுலில் இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் காலப் பகுதியில் திருமணங்கள் மற்றும் மக்கள் ஒன்று கூடும் வகையிலான பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கு தடை விதிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளுக்கு செல்வதற்கும் அனுமதிக்கப்பட மாட்டாது இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயணக்கட்டுப்பாடுகள் ஏற்கனவே அறிவித்தமைக்கமைய எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4 மணிக்கு தளர்த்தப்படும்

எனினும் மீண்டும் 23 ஆம் திகதி புதன்கிழமை இரவு 10 முதல் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணி வரை பயணக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும்.

எவ்வாறிருப்பினும் மாகாணங்களுக்கிடையிலான எவ்வித பொது போக்குவரத்துக்களும் முன்னெடுக்கப்பட மாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார். பயணக்கட்டுப்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்கு இன்று (18) வெள்ளிக்கிழமை கூடிய கொவிட் -19 செயலணி கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும் பயணக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் இந்த காலப் பகுதியில் திருமணங்கள் மற்றும் மக்கள் ஒன்று கூடும் வகையிலான பொது கூட்டங்களை நடத்துவதற்கு தடை விதிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. அத்தோடு உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளுக்கு செல்வதற்கும் அனுமதிக்கப்பட மாட்டாது என்றார்.

## மா. ச. தேர்தல் நடத்துவதில்...

இந்திய உயர்ஸ்தானிகரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். திடீரென ஏற்பாடு செய்யப்பட்ட இந்த சந்திப்பின் போது, பல்வேறு விடயங்கள்விரிவாகஆராயப்பட்டதாகதெரியவருகிறது.

வடக்கு,கிழக்குமாகாணசபைதேர்தல்நடத்தப்பட வேண்டும் என்பதில் இந்தியா கூடுதல் அக்கறை ஆக இருக்கிறது. அதே நேரம்,தேர்தல் தாமதிக்காமல் இருக்க வேண்டும் என்பதிலும் இந்தியா ஆர்வம் கொண்டிருக்கிறது. தமிழ் கட்சிகளும் மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு அழுத்தங்களை கொடுக்க வேண்டும் என்றும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்ததாக அவர் கூறினார்

அதேநேரம் நேற்று முன்தினம் நடந்த இரு தரப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் போது, அதிகாரப் பரவலாக்கம், வடக்கு,கிழக்குஅபிவிருத்திதொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டதாக சித்தார்த்தன் எம். பி கூறினார்.

## மாகாண சபைகளை வெற்...

ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

ஒட்டுமொத்தமாக மாகாண சபைகளை அதிகாரங்கள் அற்ற வெற்றுப் பொருட்களாக்குவதையே இலக்காக கொண்டவை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனைகள் உட்பட ஒன்பது மருத்துவமனைகளை மத்திய சுகாதார அமைச்சின் கீழ் கொண்டுவருவதற்கு அனுமதி அளிக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டால் தனிநாடு உருவாகும் என்றும் அது இலங்கைத் தேசிய பாதுகாப்புக்கு கேடாகிவிடும் என்றும் சிங்களத்தலைவர்கள் கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள். இவ்விதமான நிலைமை தற்போதைய ஆட்சியாளர்கள் பதவிக்கு வந்ததும் மேலும் மோசமடைந்தது. ஒரே நாடு ஒரே சட்டம் என்ற சித்தாந்தத்தினை அமுலாக்கி 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக துடைத்தெறிவதற்கு கங்கணங்கட்டிக் கொண்டிருக்கின்றனர்.

## மட்டு. இளைஞன்...

வேளை மறுநாள் அதிகாலை 4.00 மணியளவில் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளை மரணமடைந்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற வழக்கு விசாரனையின் போது பிரேத பரிசோதனை அறிக்கையில் தமக்கு சந்தேகம் உள்ளதாகவும் மீளவும் பிரேத பரிசோதனை செய்து அதற்கான சரியான நீதி கிடைக்க வேண்டும் குறித்த இளைஞனது பெற்றோர் நீதிமன்றத்தில் சாட்சியமளித்ததனைத் தொடர்ந்து இன்று (18) இடம்பெற்ற வழக்கு விசாரனைகளில் விதுசனின் பெற்றோர் சார்பாக பிரபல சட்டத்தரணி சுகாஸ் முன்னிலையாயிருந்தார்.

இந்நிலையில் இன்று மட்டக்களப்பு நீதிமன்றில் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நீதிபதியின் அறையில் நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி.றிஸ்வான் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சிரேஷ்ட சட்டத்தரணி சுகாஷ் குறித்த வழக்கு தொடர்பாக தெரிவிக்கையில்,

விதுஷனின் மரண பரிசோதனை அறிக்கையில் நம்பிக்கை இல்லாத காரணத்தினால் அவர்கள் சார்பில் மேற்கொண்ட விண்ணப்பத்தை அடுத்து மாண்புமிகு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு ஒன்றினை எங்களுக்கு வழங்கியிருக்கின்றது.

## அக்கரைப்பற்றில் 29 பேர்...

பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.எம். சதாத் தெரிவித்தார்.

மேலும் பயணத்தடையை மீறி சட்டவிரோதமாக வீதிகளில் உலாவுபவர்கள் அனுமதிப் பத்திரமின்றி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் திறந்து வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் ஆகியோர் கைது செய்யப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

அத்தியவசிய தேவைகளுக்காக வெளியில் செல்பவர்கள் முகக்கவசம் அணியாமலும், சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காமலும் செல்வதாக அறியக் கிடைத்துள்ளது. இவர்களும் கைது செய்யப்படுவார்கள் எனத் தெரிவித்தார்.

இக் காலகட்டத்தில் மக்கள் இறுக்கமான நடைமுறைகளை பின்பற்றி செயற்பட வேண்டுமெனவும், அத்தியவசிய தேவையின்றி வெளியில் செல்ல வேண்டாமெனவும் தெரிவித்தார்.

## கம்மன்பிலவுக்கு எதிரான..

எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை பாராளுமன்றத்தில் கொண்டுவருவதற்கான கையொப்பம் பெறும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

அதற்கமைய சபாநாயகரிடம் கையளிக்கப்படவுள்ள குறித்த ஆவணத்தில் இதுவரை 30 எம்.பி.க்கள் கையெழுத்திட்டுள்ளதாக லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

## சூரிய மின்சக்தி திட்டம்...

அரசாங்கமானது, இந்திய ஏற்றுமதி, இறக்குமதி வங்கியின் ஊடாக 100 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை (Line of Credit) வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதுடன், இதற்கான இரு தரப்பு கடன் ஒப்பந்தமும் செய்துகொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்துக்கும் இந்திய ஏற்றுமதி, இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள இக்கடன் ஒப்பந்தம், கடந்த புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில், நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆடிகல, இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோருக்கிடையில் பரிமாறிக்கொள்ளப்பட்டது

இதற்காக, அரச கட்டடங்கள், சமய ஸ்தாபனங்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் வீடுகளின் பங்களிப்பைப் பெற்று, சூரிய மின்சக்தியை உற்பத்தி செய்வதே அரசாங்கத்தின் முக்கிய திட்டமாகும். இதன் மூலம் குறைந்த வருமானம் பெறும் வீடுகளுக்கான பொருளாதார நன்மைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் அரச நிறுவனங்களில் மின்சாரத்துக்காக செலவாகும் அதிக தொகையைக் குறைப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது

காணித் தட்டுப்பாட்டைத் தவிர்க்கும் வகையில், நீரில் மிதக்கும் சூரிய மின்சக்தி முறைமைகளை நிறுவுவதும் இதில் உள்ளடங்கும். இதன் முதற்கட்டமாக, பாராளுமன்றத்துக்குத் தேவையான மின்சாரத்தை, தியவன்னா ஓயாவை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்படவுள்ளது.

## ட்ரோன் கமராக்கள் ஊடாக...

மற்றும் தொடர்மாடி குடியிருப்புகளில் ட்ரோன் கமாராக்கள் ஊடாக விசேட சுற்றிவளைப்புகள்மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாக செயற்படும் நபர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவுள்ளது. அதற்கமைய எதிர்வரும் வார இறுதி நாட்களில் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதன்போது கொழும்பிலுள்ள தோட்டங்கள் மற்றும் தொடர்மாடி குடியிருப்புகளை ட்ரோன் கமராக்கள் ஊடாக கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதே வேளை, போக்குவரத்து கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டுள்ள காலப் பகுதிகளில் பல்வேறு சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுவதாக தெரியவந்துள்ளது. அது தொடர்பிலும் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாடளாவிய ரீதியில் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாக செயற்பட்டதாக நேற்று காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலயத்திற்குள் 1, 390 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது குளியாபிட்டி பகுதியிலேயே அதிக எண்ணிக்கையானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். அதற்கமைய 172 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், 133 பேர் மாத்தளை பகுதியிலும் 121 பேர் கண்டியிலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய, கடந்த வருடம் அக்டோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இது வரையில் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாக செயற்பட்டதாக 38 ஆயிரத்து 311 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மேல் மாகாணத்தின் எல்லை பகுதிகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 14 சோதனைச் சாவடிகளில் முன்னெடுக்கப்படும் சோதனை நடவடிக்கைகளின் போது 3374 வாகனங்களில் பயணித்த 6,797 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இதன்போது எவ்வித தேவையும் இன்றி வருகை தந்திருந்த 108 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றார்.

## அதிகாரிகளுக்கு ஜனாதி...

அரச மற்றும் தனியார்த்துறை நிறுவனங்கள், மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர்களைக் கொண்டு பணிகளைத் தொடர, நிறுவனத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து வர்த்தக மற்றும் பொருளாதார நடவடிக்கைகள், குறைந்தளவான நபர்களின் பங்குபற்றலுடன் மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

ஆசிரியர் பக்கத் தொடர்ச்சி...

## நிர்வாக பயங்கரவாதம்

'நிர்வாக பயங்கரவாதம்' என்றே சொல்லலாம்.

தமிழ் கூட்டமைப்பும் தமிழர் தரப்பும் சிறுபான்மையினர் ஒன்றுபட வேண்டும் என்ற கொள்கையில் செயல்பட்டாலும், முஸ்லிம் தரப்பினால் ஏற்படுத்தப்படும் இப்படியான நிர்வாகச் சிக்கல்கள் இரு சமூகங்களும் ஒன்று படுவதற்கு முட்டுக் கட்டையாகவே இருக்கும்.

எதிர்க்கட்சியில் இருந்தாலும் தங்களது சமூக நலனுக்காக ஒன்றுபட்டு செயல்படும் முஸ்லிம் எம்பிக்களின் செயல்பாட்டை தமிழர்தரப்பு எம்பிக்கள் பாடமாகக் கொள்ள வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் ஏராளம். இவைகளை, கட்சி அரசியலுக்கு அப்பால் தமிழ் எம்பிக்கள் ஒன்றுபட்டு செயல்பட்டாலே இவ்வாறான சிக்கல்களுக்கு தீர்வு காண முடியுமென்பதை நாம் அழுத்தமாகச் சொல்லி வைக்கிறோம்.

கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
பிரதான வீதி, பாண்டிருப்பு, கல்முனை. இலங்கை.

+94 77 6965343
+94 76 2933026
+94 77 3457915
kalmunainet@gmail.com
ceditorsaga@gmail.com

குறள் விருந்து

**பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள்கெடுத்து அல்லல் உழப்பிக்கும் சூது.**

பொருளைப் பறித்துப் பொய்யனாக ஆக்கி, அருள் நெஞ்சத்தையும் மாற்றித், துன்ப இருளில் ஒருவனை உழலச் செய்வது சூது.

# நிர்வாக பயங்கரவாதம்

நாடு இன்று பெரும் பேரழிவை எதிர்கொள்ளும் நேரத்தில், காணிகளை கபளீகரம் செய்து கையகப்படுத்துவதில் சில பெரும்புள்ளிகள் ஈடுபட்டிருப்பது அம்பலமாகி இருக்கிறது.

பலநாள் கள்ளன் ஒருநாள் பிடிபடுவது போல, அதிகாரப் பின்புலத்தோடு நடத்தப்பட்டு வந்த, இத்தகைய காணி கபளீகரங்களில் ஒன்றே இப்போது கையும் மெய்யுமாக பிடிபட்டு இருக்கிறது.

தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசமான பெரியநீலாவணையிலுள்ள இயற்கையான இடமே 'தோணா' சலவைத் தொழிலாளர்கள் காலங்காலமாக தங்களது தொழிலுக்கு பயன்படுத்தி வருகின்ற அழகிய நிலப்பிரதேசம் இது.

பயணக் கட்டுப்பாடுகள் முழுமையாக அமுல்படுத்தப்பட்டிருக்கும் நேரத்திலும் பாரிய லொரிகளில் மண் ஏற்றிவந்து ஓர் இடத்தை நிரப்புவது என்பது சாதாரண ஒருவரால் முடியாத காரியமாகும்.

மக்கள் வீடுகளுக்குள் முடக்கப்பட்ட நிலையில் திருட்டுத்தனமாக அரச காணியை நிரப்பி கபளீகரம் செய்வது என்பது தேசத்துரோகம் மட்டுமல்ல, தமிழர்களின் இருப்பை நெருக்கடிக்கு உள்ளாக்கும் நயவஞ்சகத்தனம் என்பதும் புரிந்து கொள்ள முடிகின்றது.

இந்த சர்ச்சைக்குரிய தோணா பிரதேசம், கல்முனை வடக்கு உப - பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நிர்வாக பிரதேசமாகும். அரச காணியை திருட்டுத்தனமாக பிடித்து, மண் நிரப்பி ஒருவருக்கு உரிமை ஆக்குவது என்பது மோசமான பயங்கரவாதத்துக்கு ஒப்பான செயலாகும்.

'தோணா' பகுதியில் காணி திருட்டுத்தனமாக நிரப்பப்படுவதை அறிந்த பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன், ஸ்தலத்துக்கு சென்று தடுத்து நிறுத்தியதோடு உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தார். இருந்தாலும், இதன் பின்னணியில் யார் இருந்தார்கள் என்பது இதுவரை கண்டறியப்படவில்லை. இதன் உண்மை நிலை மறைக்கப்படுவதை பார்க்கின்ற போது, அதிகாரப் பலமுள்ள உயர் மட்ட நிர்வாக அதிகாரிகள் இதற்கு பின்னால் இருக்கிறார்கள் என்பதை மட்டும் ஊகிக்க முடிகின்றது.

இதேபோல, வாழைச்சேனை பதிவாளர் பிரச்சனையும் இப்பொழுது கடுமையாக சூடு பிடித்திருக்கிறது. தமிழ் மக்கள் மத்தியில் பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கும் பிரச்சனை இதுவாகும். வாழைச்சேனையில் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் ஓட்டமாவடியில் பிறப்பதாகவே பதிவு செய்யப்படுகிறது. இது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் செயல்பாடு.

வாழைச்சேனை பிரதேசத்திற்கு ஒரு பதிவாளர் இல்லாத குறையை பயன்படுத்தி, ஓட்டமாவடியில் பதிவு செய்வதில் தவறில்லை. என்றாலும், கூட ஒருவரின் பிறப்பிடத்தை மாற்றுவது என்பது மிகப் பெரிய அடிப்படை உரிமை மீறல் ஆகும்.

ஓட்டமாவடி பிரதேச செயலகத்தை தளமாகக் கொண்டு செயல்படும் பதிவாளர், கடந்த 29 ஆம் திகதி (29.04.2021) அமுலுக்கு வரும் வகையில் கோரளைப்பற்றுக்கு மாற்றப்பட்டார். இரண்டு மாதங்களில் அது ரத்து செய்யப்பட்டதோடு, ஓட்டமாவடிக்கே அவர் திருப்பியும் அனுப்பப்பட்டார்.

பல்வேறு கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏழு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாகச் சமர்ப்பித்த கோரிக்கைக்கு அமைய இந்த நடவடிக்கை ரத்து செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஓட்டமாவடியில் செயல்படும் பதிவாளரை மாற்றித் தர வேண்டும் என்பது தமிழர் தரப்பின் நீண்ட கால கோரிக்கை. தமிழர்களின் அடிப்படை உரிமை பிரச்சனைக்கு தீர்வுகாண முற்படும்போது, நிர்வாகப் பயங்கரவாதம் என முஸ்லிம் தரப்பு விமர்சித்திருக்கிறது. தாங்கள் செய்வதை மூடி மறைக்கும் இழி செயலாகவே இந்த கருத்தை பார்க்க முடிகின்றது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக, மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமானசிவநேசத்துரைசந்திரகாந்தன் எடுத்த நடவடிக்கையும் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது.

இந்த அரசாங்கத்தில் முக்கிய புள்ளியாக இருப்பவர் சிவனேசதுரை சந்திரகாந்தன். இவர் எடுத்த நடவடிக்கையை அரச உயர்மட்டமே தடுத்து நிறுத்தி இருக்கிறது என்றால் முஸ்லிம் தரப்பின் அரசியல் செல்வாக்கை, நாம் நன்கு உணர்ந்து கொள்ள முடிகின்றது.

கல்முனை உப - பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தும் பிரச்சனையும் இவ்வாறு அரசியல் அதிகாரங்களை பயன்படுத்தி முஸ்லிம் தரப்பினரால் தடுத்து நிறுத்தப்பட்டு வருகிறது.

முழுமையான அரசியல் அதிகாரங்களை பயன்படுத்தி நிர்வாக ரீதியாக இவர்கள் செய்யும் இத்தகைய நடவடிக்கைகள் ஒரு

மிகுதி 2ஆம் பக்கம்




# கடல்களில் அமிழ்த்தப்படும் வாகனங்கள்!

## சுற்றுச் சூழலுக்கு உகந்ததா?

உலகெங்கும் பாவித்து, ஒதுக்கப்பட்ட அல்ல கழிக்கப்பட்ட தரையிலோடுகின்ற வாகனங்கள், ரயில் பெட்டிகள், கப்பல்கள், யுத்த தாங்கிகள், கடற் பகுதிக்கு கப்பல்களில் எடுத்துச் செல்லப்பட்டு, செயற்கையாக முருகைக் கற்பாறைகள் வளர்வதற்காகவும், மீன்களின் குடித்தொகையை அதிகரிப்பதற்காகவும் அமிழ்த்தப்படுகின்றன.

2007ஆம் ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டு வரை, நியுயோர்க்கில் பாவித்து ஒதுக்கப்பட்ட 2500 இற்கும் மேற்பட்ட நிலக்கீழ் ரயில்பெட்டிகள், அத்திலாந்திக் சமுத்திரப் பகுதிகளில் அமிழ்த்தப்பட்டிருக்கின்றன. இது உலகம் முழுவதும் நெடுங்காலமாக செய்யப்படும் ஒரு நடைமுறையாகும். இதன் மூலம் மீன்கள், சிலந்திரேற்றாக்கள், முருகைக் கற்பாறைகள், அதனை நம்பிய உயிரினங்கள், மற்றும் கடற்தாவரங்கள் வளர்ந்து, நிலைத்து நிற்கக்கூடிய ஒரு சூழற்றொகுதியை உருவாக்குகின்றன.

நடத்தைச்சூழலியலின் *(Behavioural Ecology)*, உணவு சூழலியலில் *(Ecology of feeding)* இந்த அமிழ்க்கப்பட்ட வாகனங்கள், முக்கியமான பங்கை வகிக்கின்றன. எப்படி ஒரு இரை கொல்லி விலங்கானது, இரைகளைக் கொல்வதற்கான திறன்களை அவைகளின் கூர்ப்புப் பொறிமுறைகளில் விருத்தி செய்துகொண்டிருக்கின்றனவோ அதே போன்று இரைகளும், இரைகொல்லிகளிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கான, அவைகளை அடையாளம் காண்பதில், பிடித்துக்கொள்வதில் கடினங்களை ஏற்படுத்தல் போன்ற திறன்களை சமாந்தரமாக விருத்திசெய்துகொண்டிருக்கின்றன. இதற்கு இந்த அமிழ்த்தப்பட்ட வாகனச் சூழற்றொகுதி உதவுகின்றன. அவைகள் ஒழிந்து கொள்வதற்கும், தப்பித்துக் கொள்வதற்கும் பாரிய பங்காற்றுகின்றன.



அதே வேளை, ஆழங்களைப் பொறுத்து சிறிய புற்கள், அல்காக்கள் பிளாந்தன்கள் சேரும்போது, தாவரவுண்ணி, ஊனுண்ணி, அனைத்துமுண்ணி போன்ற விலங்குகளின் உயிரியல் பன்மைத்துவம் அதிகரிக்கும்போது உணவுகளின் அளவும் அதிகரிக்கின்றன. ஒழிந்து கொண்டு மற்ற உயிரினங்களையும் வேட்டையாடுகின்றன. வேகமாக நீந்தி உணவைப் பெற்றுக்கொள்ள முடியாத, நீரோட்டத்தினால் இலகுவில் அடித்துச் செல்லப்படக்கூடிய உயிரினங்களுக்கும் இந்தச் சூழற்றொகுதி ஒரு வரப்பிரசாதமாகும். இந்த அமிழ்த்தப்பட்ட வாகனச் சூழற்றொகுதியினால் வளர்ச்சி வீதம் அதிகரித்து மீன்களின் குடித்தொகையும், மற்ற விலங்குகளின் குடித்தொகையும் அதிகரிக்கும்.

மன்னார் கடலில் இருபது பாவித்து, கழிக்கப்பட்ட பஸ்களை இலங்கை அரசாங்கம் கடலில் அமிழ்த்திய நடவடிக்கைக்கு எதிராக இந்திய, இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 17 மீனவ சங்கங்கள் ஆர்ப்பாட்டங்களை நடாத்தியுள்ளன. அதற்கு அவர்கள் கூறும் காரணம், நிறைய மீன்வளங்களை அமிழ்த்தப்பட்ட வாகனச் சூழற்றொகு கவர்ந்துவிடும். இதனால் இந்தியாவில் மீன்வளம் குறையும். இது சிறுபிள்ளைத்தனமான காரணமாக தெரிந்தாலும், அதற்குப் பின்னாலுள்ள காரணம் என்பது, இந்த பஸ்கள் அவர்களது கடல் அடித்தள இழுவை வலைகளை *(bottom set trawler nets)* சேதமாக்குவதுடன், இலங்கை மீன்வளங்களை கவர்ந்துகொள்வதிலும், அழிப்பதிலும் அந்தப்பிரதேசத்தில் அவர்களுக்கு பாரிய தடைகளாயிருக்கும் என்பது எல்லோராலும் இலகுவில் புரிந்துகொள்ளக்கூடிய ஒன்றாகும்.

நன்றி: ஏ.எம். றியாஸ் அகமட்

# ஒன்லைன் வலைப்பின்னல் சிக்கல்களுக்கு உடனடி தீர்வு

## கபில பெரேரா



கொரோனா தொற்று அச்சுறுத்தல் காரணமாக மேல் மாகாண மாணவர்கள் 9 நாட்கள் மாத்திரமே பாடசாலைக்கு சமூகமளித்துள்ளதாக கல்வி அமைச்சுக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் 29 ஆம் திகதி முதல் ஏப்ரல் 9 ஆம் திகதி ஆகிய காலப்பகுதியிலேயே மேல் மாகாண மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளித்துள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"ஏனைய மாகாணங்களில், ஜனவரி மாதம் 11 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி வரையான காலப் பகுதிகளிலும், ஏப்ரல் 19 ஆம் திகதி முதல் ஏப்ரல் 23 ஆம் திகதி வரையான காலப்பகுதிகளிலும் பாடசாலைக்கு சென்றுள்ளனர்.

பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னர், கொரோனா வைரஸை தடுப்பதற்காக ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு 279,000 தடுப்பூசிகளும் கல்வி அமைச்சு, பரீட்சைகள் திணைக்களம், இராஜாங்க கல்வி அமைச்சு ஆகியவற்றின் ஊழியர்களுக்கு 2000 தடுப்பூசிகளும் வழங்குவதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும் பாடசாலை மாணவர்களுக்கும் தடுப்பூசியேற்றுவது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளோம். இதன் முதற்கட்டமாக உயர்தரத்துக்கு தோற்றவுள்ள 202,000 மாணவர்களுக்கு தடுப்பூசியேற்றுவதற்கு சுகாதார சேவை பிரிவினருடனான பேச்சுவார்த்தையின்போது தீர்மானிக்கப்பட்டது.

மேலும், தற்போது ஒன்லைன் மூலமாக கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் மாணவர்கள் தொடர்புப்படுத்தும் வசதிகள் (சிக்னல்) இல்லாது தவித்து வருகின்றனர். இந்த தொடர்புப்படுத்தும் வசதிகள் இல்லாத பிரதேசங்களை இனங்கண்டு அதற்கான தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்கு கல்வி அமைச்சு நேரடியாக தலையிட்டு, முறையான திட்டமொன்றை செயற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

எந்தவொரு தொலைப்பேசி வலையமைப்பின் ஒன்றின் மூலம் 100 ரூபாவை செலுத்தி 30 ஜிகா பயிட் இணையத்தள வசதிகளை மாணவர்களுக்கு பெற்றக்கொடுப்பதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றோம்" என்றார்.

நாட்டில் கொவிட் 19 தொற்று நிலைமை தணிந்து சிறந்த சூழ்நிலை ஏற்பட்ட பின்னர் கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும் . பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கான முதற்கட்டமாக ,ஆசிரியர்கள் உள்ளிட்ட கல்வி துறையைச் சேர்ந்த பணியாளர்களுக்கு கொவிட் 19 தொற்று தடுப்பூசி ஏற்றப்படும் நடவடிக்கை அமையும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்.

# தடுப்பூசி ஏற்றுவதில் மக்கள் பேரார்வம்



பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.அகிலன் MOH

அட்டாளைச்சேனை , ஆலையடிவேம்பு பிரதேச வைத்திய அதிகரி எஸ்.அகிலன் கல்முனை கல்முனை நெற் ஊடக வலையயமைப்புக்கு வழங்கிய நேர்காணல்...

**தற்போது கொவிட் நிலைமை தாங்கள் கடமையாற்றும் அட்டாளைச்சேனை, .ஆலையடிவேம்பு ஆகிய இரண்டு பிரிவுகளிலும் எவ்வாறு உள்ளன?**

முதலாம், இரண்டாம் கொவிட் அலைகளைவிடவும் தற்போது மூன்றாவது அலையின் தாக்கம் நாட்டில் அதிகமாக உள்ளமை அறிந்தவிடயமே. எமது பிரிவுகளில் முதலாவது அலையின் பாதிப்பு அதிகம் இல்லை. ஆனால், இரண்டாவது அலையின்போது அட்டாளைச்சேனையில் கணிசமான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தார்கள். தற்போது மூன்றாவது அலையில் அட்டாளைச்சேனை பிரிவில் 178க்கும் அதிகாமானோரும், ஆலையடிவேம்பு பிரிவில் 18 பேரும் 18.06.2021 வரை அடையபளம் காணப்பட்டுள்ளனர். கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு தொற்றாளர்களின் எண்ணிக்கை கட்டுக்குள் இருந்த நிலை காணப்பட்டாலும், தற்போது தொற்றாளர்கள் தினமும் அடையாளம்காணப்படும் நிலை உள்ளமை நோயின் தீவிரத்தை காட்டுகின்றது.

பயணக்கட்டுப்பாடு ஆரம்பித்த நாட்களில் இருந்ததைவிட தற்போது மக்களின் நடமாட்டம் சற்று அதிகரித்திருக்கின்றது எனலாம். சுகாதாரத்துறையினர், படையினர் 24 மணிநேரமும் அறிவுறுத்தல்களை வழங்குதல், தடுப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுக் கொண்டும் இருக்கின்றார்கள் பொதுமக்களின் ஒத்துழைப்பும் மிகவும் அவசியமாகும். அத்தியாவசியமற்ற பொருட்கள் விற்பனை செய்யும் கடைகளின் உரிமையாளர்களும் தங்கள் கடைகளை திறப்பதற்கு முயற்சிக்கின்றார்கள் இந்த சூழ்நிலையில் இது மேலும் பாதிப்புக்களை அதிகரிக்கும்.

**சுகாதார நடைமுறைகள் அறிவுறுத்தல்களுக்கு மக்களின் ஒத்துழைப்பு எவ்வாறு உள்ளன?**

உண்மையில் 90 வீதமான மக்கள் கொவிட் அச்சத்தில்தான் உள்ளார்கள். எமக்கு ஒத்துழைப்புக்களை வழங்குகின்றார்கள். இருந்தாலும் மிக சொற்பளவு வீதமானோர் கொவிட் அச்சுறுத்தல் தொடர்பாகவோ, பயணக்கட்டுப்பாடு தொடர்பாகவோ, மரணங்கள் தொடர்பாகவோ பொருட்படுத்தாமல் பாதுகாப்பற்ற முறையில் நடமாடுவதை உணரமுடிகின்றது. கடந்த ஒரு வாரமாக மக்களின் நடமாட்டமும் அதிகமாக காணப்படுகின்றது. சுகாதாரதுறையினரும், பாதுகாப்பு துறையினரும் தொடர்ச்சியான சேவையில் பல்வேறு சிரமங்களுடன் ஈடுபட்டுவருகின்றார்கள். மக்களின் ஒத்துழைப்பு கடந்த ஓர் இரு வாரங்களுடன் ஒப்பிடுகையில் குறைவாகவே உள்ளது எனலாம்.

**தாங்களின் பிரிவுகளில் கொவிட் தப்பூசிகள் செலுத்தும் ஏற்பாடுகள் எவ்வாறு உள்ளன? மக்கள் ஆர்வமாக உள்ளார்களா?**

கல்முனை பிராந்தியத்திற்கான கொவிட் தடுப்பூசிகள் இதுவரை கிடைக்கவில்லை. பெறுவதற்கான எற்பாடுகள் சகல மட்டங்களிலும் நடைபெறுகின்றன. இரண்டு, மூன்று வாரங்களுக்கு முன்பு கல்முனை பிராந்தியம் ,ஏனைய பிராந்தியங்களுடன் ஒப்பிடுகையில் தொற்று குறைவாகவும், பாதுகாப்பான பிராந்தியமாகவும் இருந்தது .இதனால் கொவிட் தடுப்பூசி வழங்குதலில் எமக்கு முன்னுரிமை கிடைக்கவிலை. ஆனால் தற்போது நிலைமை சற்று மாறிக் கொண்டுசெல்கின்றது அது மட்டுமல்லாது, எமது பிரதேசம் மக்கள் செறிந்து வாழுகின்ற பிரதேசம். இப்பிரதேசங்களுக்கு கொவிட் தடுப்பூசி செலுத்தாதுபோனால் எதிர்காலத்தில் கொவிட்மரணங்களை கட்டுப்படுத்த முடியாத நிலைமைவரலாம். தடுப்பூசி வழங்குவதற்குரிய முன் ஏற்பாட்டு நடைமுறைகளை அநேகமாக எங்களது பிரிவுகளில் பூர்த்தி செய்துள்ளோம்.

அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் , கர்ப்பினி தாய்மார்கள் ( 28 வாரங்கள்) ,சேவைகளில் பொதுமக்களுடன் நேரடியாக முகங்கொடுப்பவர்கள் ,உதாரணமாக பிரதேச செயலக கிராம சேவை உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போன்ற கள உத்தியோகத்தர்கள் ,பிரதேச சபை சுகாதார தொழிலாளர்கள் இப்படியானவர்களுக்கே தடுப்பூசி முதலில் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அறுபது வயதுக்கு மேற்பட்ட தடுப்பூசிபோடுவதற்குவிரும்பியர்வகளை முன் பதிவு செய்யுமாறு அறிவித்திருந்தோம். 30 தொடக்கம் 40 வீதமானோர் தாமாக முன்வந்து பதிவு செய்துள்ளார்கள் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**மக்களுக்கு வழங்கக்கூடிய ஆலோசனை என்ன?**

எமது உடன் பிறப்புக்களை, தாய் தந்தை உறவுகளை காப்பாற்ற வேண்டுமாக இருந்தால் அனைவரும் சுகாதார நடைமுறைகளை பொறுப்புடன் பின்பற்ற வேண்டும். கட்டுப்பாடுகள் தொடர்வதால் அது சிரமமாக இருந்தாலும் எமக்கு வேறு வழி இல்லை. பொறுமையுடன் நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். கண்ணுக்கு தெரியாக வைரசுடன் போராடுகின்றோம். நாம் வீணாக நடமாடுவதால் பாதிப்பு எமக்கும், எமது குடும்பத்துக்குமே. உயிரை இழக்கும் நிலைமைக்கும் கொண்டுபோய்விடலாம். எனவே மக்கள் அரசாங்கத்தின் அறிவறுத்தல்களை பின்பற்றி நடந்துகொள்ளுமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றேன்.

பயணக்கட்டுப்பாடுகள் இல்லாது சுதந்திரமாக நடமாட எமக்கு இருக்கும் ஒரே ஒரு வழி இந்த கொவிட் தடுப்பூசி மட்டுமே. அதைத்தவிர தற்போதைக்கு எந்த வழியும் இல்லை. எதிர்காலத்தில் வெளியிடங்களுக்கு செல்வதாக இருந்தாலும் ,வெளிநாடுகளுக்கு செல்வதாக இருந்தாலும் கொவிட் தடுப்பூசி ஏற்றப்பட்டமை முக்கியமாக கவனத்தில் கொள்ளப்படும். கொவிட் தடுப்பூசி தொடர்ந்தும் கிடைக்குமா என்பதற்கு விடை எனக்கு தெரியாது. தற்சமயம் எமக்கு கொவிட் தடுப்பூசி கிடைக்கும்போது சந்தர்ப்பத்தை பொதுமக்கள்பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நேர்காணல் பு.கேதீஸ்

# காலநிலை மாற்றமும் இலங்கையும்

பா.சுரேனிகா – திருகோணமலை வளாகம் ,கிழக்குப் பல்கலைக்கழகம்

பருவ நிலை மாற்றம் என்பது உலகின் ஒரு பகுதியிலோ அல்லது உலகம் முழுவதுமோ தட்ப வெப்பநிலையில் ஏற்படும் மாற்றமாகும். இதில் தீவிர பருவ நிலை மாற்றமானது, காலநிலையில் நீண்டகால இடைவெளியில் மாற்றங்கள் ஏற்பட்டு அனர்த்தங்கள் அடிக்கடி இடம் பெறுவதால் இது நீண்ட கால மாற்றம் எனப்படும்.கால நிலை மாற்றத்திற்கு கரியமில வாயுக்கள் முக்கிய காரணமாக அமைகின்றன. உதாரணமாக காபனீரொட்சைட், நைட்ரைட் ஒட்சைட், மீதென், ஓசோன் குளோரோ புளோரோ காபன் (CFC)ஆகிய வாயுக்களைக் குறிப்பிடலாம்.

இவ் வாயுக்கள் தொழிற்சாலைகளாலும் விவசாய நடவடிக்கையின் போது பயன்படுத்தப்படும் கிருமி நாசினிகளாலும் குளிர்சாதனப்பெட்டிகளின் பயன்பாட்டினாலும் அதிகளவில் வெளியாகின்றன. அந்தவகையில் அதிகளவில் வெளியேற்றும் நாடுகளாக அமெரிக்கா (19.70 மெற்றிக் தொன்), ரஷ்யா (11 மெற்றிக் தொன்), ஐரோப்பா (9.7 மெற்றிக் தொன்), இந்தியா (1.3 மெற்றிக் தொன்) ஆகியன காணப்படுகின்றன.தனிநபர் காபன் உமிழ்வில் சீனா,அமெரிக்கா,இந்தியா, ரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகள் முன்னிலை வகிக்கின்றன.

இவ்வாறு கரியமில வாயுக்கள் வெளியேற்றப்படுவதால் ஏற்படும் உடனடிப் பாதிப்புக்களாக வட,தென் துருவ பனிக்கட்டி உருகுதல், கடல்மட்டம் உயர்தல், உலக கரையோரப் பகுதி நீரில் மூழ்குதல், தரை நிலம் தாழ்வடைதல், இயற்கை அனர்த்தம் அதிகரித்தல் என்பனவற்றைக் குறிப்பிடலாம். மேலும் பருவ நிலை மாற்றம் காரணமாக ஏற்படும் முதன்மைப் பாதிப்புக்களாக புவி வெப்பமயமாதல், முனைவு மற்றும் உயர்மலைப்பனி உருகுதல்,தொடர்ச்சியான வறட்சி ஏற்படல், வானிலை மாற்றம், கடல் நீர் வளம் உயர்வடைதல் என்பன ஏற்படும். காலநிலை மாற்றத்தின் பிரதானமான சவால்களாக மனித சுகாதாரம், மனித பாதுகாப்பு, வாழ்க்கைத்தரம், பொருளாதார வளர்ச்சி வீதம் முதலானவை பாதிப்படைதல், நீர் மூலமான நோய்கள்,ஊட்டச்சத்துக்குறைபாடு,மீன் இனப்பெருக்கம் பாதிப்படைதல் என்பவற்றைக் கூறலாம்.

காலநிலை மாற்றத்தின் விளைவை உடனடியாக தடுக்க முன்வைக்கும் முதன்மைத் தீர்வுகளாக கரியமில வாயு வெளியேற்றத்தைத் தடுத்தல், புதுப்பிக்கத்தக்க சக்தி வளத்தை நோக்கி நகருதல் என்பனவாகும். உலக அளவில் புதுப்பிக்கத்தக்க சக்திகளான காற்றலை,கடலலை,சூரியசக்தி மூலம் நாடுகள் மின்வலுவை உற்பத்தி செய்கின்றன. சீனா, அமெரிக்கா,பிறேசில் இந்தியா ஆகிய நாடுகள் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலம் மின்னுற்பத்தியை மேற்கொள்ளும் முதன்மை நாடுகளாகும். அந்த வகையில் காற்றலை மூலம் மின்னுற்பத்தியை சீனா, அமெரிக்கா,ஜேர்மன்,இந்தியா ஆகிய நாடுகள் மேற்கொள்கின்றன. சூரிய சக்தி மூலமாக மின்வலுவை உற்பத்தி செய்யும் நாடுகளாக சீனா, அமெரிக்கா,ஜப்பான்,இந்தியா,ஜேர்மன் போன்ற நாடுகள் முன்னிலை வகிக்கின்றன

பூகோள வெப்பமயமாதலை தடுக்க கியோட்டோ ஒப்பந்தம், ஊழி21இ சுழை 1020 ஆகிய ஒப்பந்தங்கள் உலக நாடுகளிடையே மேற்கொள்ளப்பட்டுள்ளன. பருவ நிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் வகையில் உலக நாடுகளை ஒருங்கிணைத்துச் செயற்படும் சர்வதேச அமைப்புக்கள் ஐநாவிற்கான பருவநிலை மாற்ற சாசன கட்டளை (UNFCC) பருவ நிலை மாற்றம் பற்றி ஆராயும் அரசுகளிற்கிடையான குழு (IPCC) போன்றனவாகும்.

காலநிலை மாற்றம் காரணமாக இலங்கையில் பிரதானமாக நெற்செய்கை,பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை, பாற்பண்ணைத் தொழில் விவசாயத்தைச் சார்ந்து பாதிக்கப்படும் துறைகளாகும். காலநிலை மாற்றம் காரணமாக இலங்கையில் வட மாகாணம், வடமேல் மாகாணம் என்பனவற்றின் வெப்பநிலை உயர்வடையுமெனக் கூறப்படுகிறது. இதனால் இலங்கையில் வறுமையளவு அதிகரித்தல், சமூக சமத்துவமின்மை, மக்களின் வாழ்க்கைத்தரம் குறைவடைதல் போன்ற சமூகப் பாதிப்புக்கள் ஏற்படும். மேலும் பொருளாதாரம் சார் பாதிப்புக்களாக மொத்த உள்நாட்டு உற்பத்தி குறைவடையும், தனி நபர் வருமானம் குறைவடையும் நிலை ஏற்படும். மேலும் சூழலியல் மாற்றங்களாக அதிகரித்த வெப்பநிலையும் வரட்சியும் மழைவீழ்ச்சியில் மாற்றம் என்பன ஏற்படும்.

இம் மாற்றத்திற்கு ஈடுகொடுக்கும் விசேட வேலைத்திட்டங்களாக இலங்கையில் உலர் வலய சிறு குளங்களைப் புனரமைத்தல், தரைக்கீழ் நீர்வளம் பேண மர நடுகை செயற்றிட்டம் (ஹரித லங்கா) உற்பத்தித் தரத்தை அதிகரிக்க நவீன தொழிநுட்பத்தை பயன்படுத்தல், சந்தைப்படுத்தல் வசதியை விரிவாக்கம் செய்தல் என்பனவாகும். காலநிலை மாற்றத்தை தவிர்க்க இளம் சந்ததியினருக்கு முன்வைக்கப்படும் ஆக்க பூர்வமான ஆலோசனைகளாக நுகர்வு கலாசாரத்தை மாற்றியமைத்தல் (காபன் எதிர் நுகர்வு) பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள சந்தை சக்திகளை பயன்படுத்தல். உதாரணமாக கலப்புப் பிறப்பாக்கம்(ர்லடிசனை, மின்சார கார் பயன்பாடு, பூச்சிய காபன் வெளியீட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்தல், வளியிலுள்ள காபனைப் பயன்படுத்தி பிளாஸ்டிக் பொருட்களைத் தயாரித்தல் ,புதுப்பிக்கத்தக்க வளப்பயன்பாட்டை அதிகரித்தல் என்பனவாகும்.

# மண்டூர் தந்த பெரும் படைப்பாளி

## பண்டிதர் வீ.சீ.கந்தையா



மட்டக்களப்பு, மண்டூர் மண் பல இலக்கியர்களை தந்த மண்ணாக விளங்குகின்றது. புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை,கவிஞர் மு.சோமசுந்தரம்,பண்டிதர் வி.விஸ்வலிங்கம் போன்றோர் தோன்றிய இந்த மண்ணில்தான் எமது வித்துவான் வி. சீ கந்தையா அவர்களும்29 .07 .1920 பிறந்துள்ளார்.

இவர் தனது இளமைக்காலத்தில் திரு. வ. பத்தக்குட்டி ஆசிரியரிடமும், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களிடமும்,சுவாமி விபுலானந்தரின் குருவாகியதிரு. குஞ்சித்தம்பி அவர்களிடமும் கல்வி கற்றுள்ளார். பின்னர் விபுலாநந்த அடிகளிடம்சங்க இலக்கியங்களையும்,பழந்தமிழ் இலக்கணங்களையும் கற்றார். பின்னர் யாழ்ப்பாணத்து ஆதிதிராவிட பாஷாவிருத்திச்சங்க பண்டிதர் பட்டமும் (1942), மதுரைத்தமிழ் சங்கத்தின் பண்டிதர் பட்டமும் (1944) இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் வித்துவான் பட்டமும் (1952.) அண்ணாமலை பல்கலைக்கழகத்தின்

### வாரம் ஒரு படைப்பாளி

**M.Q.f.**பட்டதாரி(**B.O.L**)பட்டமும்(1954) பெற்றார்.

சுவாமி விபுலாநந்தரால் தொடங்கப்பட்டதும், கிழக்கின் சாந்தி நிவேதனம் என்று சொல்லப்படுவதுமான சிவானந்தா வித்தியாலயத்தில் தமிழ் பேராசிரியராக பணிபுரிந்தார். இக்காலகட்டதில் இலங்கையின் பல பாகங்களிலும் மேடைப் பேச்சாளராகவும்,சமய சொற்பொழிவாளராகவும் இருந்துள்ளார். இவர்இக்காலத்தில் தமிழக ஏடுகளிலும் இலங்கைப் பத்திரிகைகளிலும் ஏராளமான இலக்கியக் கட்டுரைகளையும், தமிழ் ஆய்வுக் கட்டுரைகளையும், எழுதியுள்ளார்.

ஆசிரியராக பணியாற்றிய இவர் சில வருடங்களுக்குபின்னர்அதிபராக பதவி உயர்வு பெற்று, களுதவளை மகாவித்தியாலயம், அக்கரைப்பற்று மகாவித்தியாலயம், பட்டிருப்பு மகாவித்தியாலயம், சிவானந்தா வித்தியாலயம் ஆகிய கல்லூரிகளில் அதிபராக பணி புரிந்துள்ளார். வித்துவான் வி. சீ கந்தையா அவர்கள் சுமார் இருபது நூல்கள்வரை எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றில்மட்டக்களப்பு தமிழகம் என்ற நூல் சிறந்த நூலாக திகழ்கின்றது. பல வருட ஆய்வின் பின்னர் எழுதப்பட்டஇந்த நூல் 595 பக்கங்களை கொண்டது. இதில் மட்டக்களப்பின் வரலாறு, தமிழறிஞர்கள்,கிராமிய செல்வங்கள்,மருந்தும்மந்திரமும்,கலைக்கோலங்கள்முதலிய பல்வேறு அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. மட்டக்களப்பு பிரதேசத்தைப் பற்றி அறிய விரும்புவோருக்கு இந்த நூல் ஒரு உசாத்துணை நூலாக இன்றும் விளங்குகின்றது.

இந்த நூலுக்கு மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கம் மிகப் பெரிய வெளியீட்டு விழாவை மட்/ நகர மண்டபத்தில் அன்று நடத்தியது. இவரின் கண்ணகி வழக்குரை நூலும் மகத்தான நூலாகும். பல ஏட்டுப் பிரதிகளை ஆராய்ந்து எழுதப்பட்ட இந்த நூலை காரைதீவு இந்துசமய விருத்திச்சங்கம் 1968 ல் வெளியிட்டது. மேலும் இவர், ஆனைப்பந்தி விநாயகர் பதிகம்,கட்டுரை இயல்,கண்ணகி அம்மன் குளுத்திப் பாடல்கள்,பாரதியார்பாஞ்சாலி சபதம் ,கம்பராமாயணம் (மந்தரை சூழ்ச்சி படலமும், கைகேயி சூழ்வினைப் படலமும் உரை விளக்கத்துடன்), விபுலாநந்த ஆராய்வு விளக்கம், மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள்,அலங்காரரூப நாடகம், இராம நாடகம்,அனுவுருத்திர நாடகம்,தருமபுத்திர நாடகம்,என்று பல நூல்களையும், எழுதியுள்ளார்.


மட்டக்களப்பின் கிழக்குப் பகுதியின் தனித்துவத்தை வெளிப்படுத்த இரு துறைகள் உள்ளன. ஒன்று நாட்டுக்கூத்து, மற்றது கண்ணகி வழிபாடு. இவர் மிக ஈடுபாட்டுடன் ஊரூராக சென்று ஏடுகளையும், பிற சான்றுகளையும் ஆராய்ந்துஅறிந்து கொண்டுள்ளனர்

இவரின் சைவப் பணியை மெச்சி காஞ்சிபுர தொண்டை மண்டல ஆதீனம் இவருக்கு நாவலர் பட்டம் வழங்கியது. யாழ்பாணம் நல்லை ஆதீனம் சிவம் பெருக்கும் சீலர்என்ற பட்டதை வழங்கியதுஇவர்,மலேசியா கோலாலம்பூரில் தனிநாயகம் அடிகளாரால் அறிமுகம் செய்யப்பட்ட தமிழாராய்ச்சி மாநாட்டில் கட்டுரை வாசித்தார். அதைத் தொடர்ந்து மதுரையில் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டிலும் கட்டுரை வாசித்தார். கொழும்பில் நடந்த உலக இந்து சமய மாநாட்டிலும் கட்டுரை வாசித்தார். இவருக்கு மட்டக்களப்பு கலாசார பேரவை மகாவித்துவான் என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தது.மட்டக்களப்பு மண்டூர் மண்ணின் மகா படைப்பாளிவித்துவான் வி.சீ.கந்தையா அவர்களின்நாமம்கடலும்,வானும் இருக்கும்வரை வாழும். வாழ்க அவர் புகழ் நாமம்.

**கோவிலூர் செல்வராஜன்**

1989 அருப்புக் கோட்டை சிவன் கோயிலில் நடைபெற்ற திருமுருக கிருபானந்த வாரியார் சாமி அவர்களின் ஆன்மீக சொற்பொழிவு. அவர் ஒரு ஆன்மீகச் சொற்பொழிவாளர் என்பதையும் தாண்டி, மிகச் சிறந்த தமிழ் அறிஞர். வேதத்தத்துவங்களை எளிதில் புரியும் உதாரணங்களோடு கூறுவதில் அவருக்கு நிகர் அவரே.

**அன்று அவர் கூறிய ஒரு தத்துவம்.**



மாட்டு வண்டி உங்கள் அனைவருக்கும் தெரியும். வண்டிக்கு அறிவு கிடையாது. மாட்டுக்கு அறிவு உண்டு. ஆனால் அறிவுள்ள

## பிராணவாயு எனும் பூட்டாங்கயிறு

மாட்டால் வண்டியை தானே பூட்டிக் கொள்ள முடியாது. அறிவில்லாத வண்டியாலும் தானே போய் மாட்டின் மேல் இணைய முடியாது. வண்டிக்கு சொந்தக்காரன் ஒருவர் உள்ளான். அவன் தான் பூட்டாங்கயிறால் வண்டியையும் மாட்டையும் இணைத்து இயக்குகிறார். பயணம் முடிந்தவுடன் வண்டிக்காரன் வண்டியையும் மாட்டையும் தனித்தனியே பிரித்து வைத்து விடுவார்.

நம் உடலுக்குப் பெயர் அசித்து. ஆன்மா பெயர் சித்து. ஆன்மாவுக்கு அறிவு உண்டு. உடலுக்கு அறிவு கிடையாது. இரண்டும் தானே இணைந்து செயல்பட முடியாது. இறைவன் என்னும் வண்டிக்காரன், பிராண வாயு (ஆக்ஜிஸன்) என்னும் பூட்டான் கயிறால் உடலையும் ஆன்மாவையும் இணைத்து இயக்கிக் கொண்டு உள்ளார்.

வாழ்க்கைப் பயணம் முடிந்தவுடன் இரண்டையும் தனித்தனியே பிரித்து வைத்து விடுகிறார். அதற்கு மரணம் என்று பெயர். மரணம் வரும்வரை சரணம் சொல்ல வேண்டும் என்றபோது கரவொலி அடங்க வெகுநேரம் ஆனது. பிராண வாயு என்னும் ஆக்சிஸனுக்காக இன்று மக்கள் அல்லல் படுவதை நினைத்தபோது திரு வாரியார் சாமி அவர்களின் கதை நினைவுக்கு வந்தது.

# அகவை எழுபதைக் கடந்த அண்ணாவியார் சீ.அலக்சாண்டர்



மட்டக்களப்பின் கூத்தரங்கில் இன்று சுறுசுறுப்புடன் செயலாற்றிக் கொண்டிருக்கும் அண்ணாவிமார்களுள் ஒருவரான தன்னாமுனையைச் சேர்ந்த சீனித்தம்பி அலக்சாண்டர் அவர்கள் அவர் தனது எழுபதாவது அகவையைத்தாண்டி பயணிக்கிறார். மட்டக்களப்பு தன்னாமுனை எனும் ஊரில் 1951.10.01 ஆந் திகதி கத்தோலிக்கக் கூத்துப் பாரம்பரியத்தைக் கொண்ட குடும்பத்தில் அலக்சாண்டர் பிறந்துள்ளார். இவருடைய தந்தையான யாக்கமுத்து சீனித்தம்பி அவர்களும், மூத்த சகோதரனான சீ.அந்தோனி அவர்களும் புகழ்பெற்ற அண்ணாவிமாரா விளங்கியுள்ளனர். தந்தையைக் குருவாகக் கொண்டு தனது எட்டாவது வயதிலேயே மத்தளம் பயில ஆரம்பித்துள்ளார்.

1969 ஆம் ஆண்டு ஆடப்பட்ட ஞானபுத்திரன் வடமோடிக் கூத்தில் தோழி பாத்திரமேற்று முதன் முதலாக ஆடியுள்ளார். இதனைத் தொடர்ந்து 1971 ஆம் ஆண்டு ஞானசவுந்தரி வடமோடிக்கூத்தில் ஞானசவுந்தரியாக ஆடியுள்ளார், 1972 இல் கிறிஸ்துவின் அவதாரம் எனும் வடமோடிக்கூத்தில் ஏவாள், சத்திரகாரி எனும் பாத்திரங்களையேற்றும், 1976 இல் எஸ்தாக்கியார் வடமோடிக்கூத்தில் குறத்தியாகவும், 1979 இல் வள்ளியம்மை வடமோடிக் கூத்தில் வள்ளியாகவும் இவர் ஆடியுள்ளார். ஏறத்தாழ தனது முப்பதாவது அகவை வரை புகழ் பெற்ற பெண் பாத்திரங்களையேற்று ஒரு அண்ணாவியாருக்கான அடிப்படைத்தகுதியான பெண்கூத்துப் பயிற்சியை இவர் பெற்றுள்ளார்.மட்டக்களப்பிற்கேயுரிய கத்தோலிக்க கூத்துப் பாரம்பரியத்தின் முதுசமாக அண்ணாவியார் சீ.அலக்சாண்டர் நம்மத்தியில் வாழ்ந்து வருகின்றார்.

# கல்முனையின் பல்துறை கலைஞன் டிலோஜன்



சிறு வயதில் இருந்து இந்திய சினிமாவுக்கு நிகரான ஒரு படைப்பையாவது எடுக்க வேண்டுமென்ற ஆசையோடு தன் பயணத்தை ஆரம்பித்த கல்முனை இளைஞன் விஸ்வலிங்கம் டிலோஜன்இ தனது முதல் படைப்பாக "பெறுமதி" என்ற ஒரு குறும்படத்தில் முயற்சியை ஆரம்பித்தார். அப் படைப்பில் அடையாளப்படுத்திய குறைகளை அடுத்த படப்பான "வானம்பாடி" எனும் குறும்படத்தில் திருத்திக் கொண்டு சிறுவர்களை வைத்து அவர்களின் குறும்புகள் மூலம் தனது கதையை நகர்த்தி இருந்தார். அந்த நகைச்சுவை பாணி சமூகத்தில் நல்ல விமர்சனத்துடன் பிரபல்யம் ஆனது. அவ்வாறே தனது படைப்புகளை நகர்த்தினார்.

டான் தொலைக்காட்சியினால் நடத்தப்பட்ட 48 மணி நேர குறும்திரைப்பட போட்டியில் இவர் இயக்கிய "தீர்ப்பு" எனும் படைப்பு இலங்கையில் முதல் இடத்தை பெற்றிருந்தது. பின்னர் சமூகத்திற்கு ஒரு விழிப்புணர்வு வழங்கவேண்டும் என்ற நோக்கில் தனது பாணியில் சமூக கருத்துள்ள "சிறுவி" எனும் குறும்படத்தை கடன்களினால் சமூகத்தில் நடக்கும் பிரச்சனைகளை நகைச்சுவை கலந்து இயக்கினார் இதுவும் நல்ல வரவேற்பை பெற்றது.

அடுத்ததாக பணிப்பூ எனும் குறும்படத்தின் மூலம் வெளிநாட்டுக்கு பணிப்பெண்களாக வேலைக்கு செல்லும் பெண்களின் அவலங்களை மையமாக வைத்து இயக்கினார். அதன் பின் வாயாடி எனும் காணொளி பாடலை இயக்கினார்.

"கருகருத்தவளே" எனும் காணொளிப்பாடலை இயக்கினார் இந்தியாவில் கேரளாவில் வெளி யிடப்பட்ட பாடலின் தமிழ் வடிவமே இதுவாகும். இப்பாடல் இலங்கையில் மாத்திரமன்றி வெளிநாடுகளிலும் பிரபல்யமானது. தற்போது **YouTube** தளத்தில் ஒரு மில்லியன் பார்வையாளர்களை எதிர்பார்த்த வண்ணம் வெற்றி நடை போடுகிறதுடன் அத்துடன் இந்திய தரத்தை ஒத்த சிறந்த காட்சி அமைப்பான பாடல் எனவும் பலரால் பாராட்டப்பட்டது. அதன் பின் அவுஸ்திரேலியா அரசாங்கத்தால் நடாத்தப்பட்ட **Zero Chance** குறுந்திரைப்படப் போட்டியில் "சிதடு" எனும் குறுந்திரைப்படத்தை தயாரித்திருந்தார் அது சிறந்த பதின்மூன்று குறுந்திரைப்படங்களுள் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

**Kisha film makers** எனும் ஒரு கலைக்கூடத்தை உருவாக்கி அதனூடாக தமது படைப்புகள் வெளியிட்டதுடன் இளம் கலைஞர்கள் பலரை பாடகர்கள்இ இசையமைப்பாளர்கள், நடிகர்கள், பாடலாசிரியர்கள் என பல பரிணாமங்களில் வளர்த்து விடும் பெருமை இவருக்கு உண்டு.

இப்போது இளம் கலைஞராக தன்னை வளர்த்துக் கொண்டாலும் எல்லா கலைஞர்களுக்கும் அடிப்படை பிரச்சினையாக இருக்கும் பணம் இவரையும் விட்டுவைக்கவில்லை. இவரது படைப்புகளை பார்த்து ஒரு வங்கி முகாமையாளர் கடன் வசதியை செய்து தந்தார் அப்பணத்தில் கேமரா வாங்கி தமக்கான தொழில் முயற்சியை உருவாக்கி அந்த கடனை கட்டி தனது கலைப் படைப்புகளையும் உருவாக்கி வந்தவர்தான் டிலோஜன்.

இதிலிருந்து இத்துறைக்கு தேவையான தொழிநுட்ப வசதிகளை ஏற்படுத்தி அதற்கான கலையகத்தையும் உருவாக்கி இந்திய பின்னணி பாடகர் ஏ.ஏ. பிரசன்னா அவர்களை வைத்து திறந்து வைத்தார்.

ஒவ்வொரு தொழிநுட்ப வளங்களையும் குருவி சேர்ப்பது போல யாருடைய உதவியும் இன்றி சிறிது சிறிதாக சேர்த்துக்கொண்டிருக்க்கும் இவரது குழுவினர்கள் பன்முகத்தன்மை வாய்ந்தவர்கள். தற்போது **Government Job** எனும் முழு நீள திரைப்படத்தை திரையரங்குகளில் வெளி யிடும் நோக்கத்துடன் இயக்கி வருகிறார். எனினும் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக தற்காலிகமாக படப்பிடிப்புக்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

**இவரது சினாமா பயணம் இந்திய சினிமாவுக்கு நிகராக வளர்ச்சியடைய வாழ்த்துகள்.**



இளம் கலைஞர் அறிமுகம்
**கு.கிலசன்**

# இலக்கிய உலகில் சாதிக்க துடிக்கும் சியா.



சிபானா எனும் இயற்பெயரைக் கொண்ட சியா கல்முனையைப் பிறப் பிடமாகக் கொண்டவர். தனது ஆரம்பக் கல்வியினை சேனைக்குடியிருப்பு கணேசமகா வித்தியாலயத்தில் கற்றதோடு கடந்த இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டு ஊடககற்கை நெறியினையும் கற்றுக் கொண்ட இவர் தற்போது கிழக் கின் ஒலுவில் எனும் அழ கிய கிராமத்தில் வசித்து வருகிறார்.தமிழ் மீது கொண்ட விருப்பும் அவரது ஆசா னின் தட்டிக்கொடுப்பின் காரணமாகவும், எழுத்துத் துறையில் கால் பதித்து பள்ளிக்காலம் முதலே ஆக்கங்கள் எழுதுவது,

பாடல்கள் பாடுவது, நாடகங்கள் நடிப்பது, நடனமாடுவது என்றே இவரது கலைப் பயணம் தொடங்கியது. பின்னர் நாளடைவில் கலைப்பயணம் காணாமல் போனதாக உணர்ந்த போதும் எழுத்தாற்றல் மட்டும் மறைய வில்லை. ஆரம்ப காலகட்டத்தில் பொழுது போக்காக எழுத ஆரம்பித்த இவருக்கு காலப்போக்கில் எழுத்தே வாழ்க்கை என உருமாறிப் போனது. அதற்கு காரணமாக இருந்த பல நண்பர்களது தட்டிக்கொடுப்பும், அவரது தமிழ் ஆசான் திரு.தருமலிங்கம் அவர்களின் வழி காட்டலாலும் இலக்கிய துறையில் தடம் பதித்துள்ளார்.

இலங்கையில் உள்ளது சில வானொலிகள் களம் கொடுத்ததால் சில காலம் வானொலிக் கவிஞராக வலம் வந்த இவருக்கு கடந்த இரண்டாயிரத்துப் பத்தொன்பதில் கொடகே புத்தக நிறுவனம் கைகொடுத்தது. அதன் விளைவாக அவ்வாண்டில் தனது கன்னி நூலான "வலித்திடினும் சலிக்கவில்லை" எனும் கவிதைத் தொகுதி ஒன்றை வெளி யீடு செய்தார். அந்நூல் கொடகே தேசிய சாகித்திய விருதினையும் பெற்றுக் கொண்டது.சுமார் பதினைந்து வருடங்களுக்கு மேலாக இலக்கிய துறையில் தடம் பதித்து வரும் இவர் கவிதைகளை எழுதுவதோடு மட்டும் நின்று விடாமல், குரல் பதிவுகளைச் செய்வது, வலைத்தளச் செய்திச் சேவைகளுக்காகக் குரல் கொடுப்பது, விளம்பரங்களுக்குக் குரல் கொடுப்பது, பாடல் எழுதுதல், சிறுகதை, நாவல், சிறுவர் பாடல்கள் எழுதுவது என தன்னால் முடிந்த பங்களிப்புகளை இலக்கிய ஊடக உலகிற்கு செய்து வருகிறார்.

இலக்கிய உலகில் இதுவரை கொடகே தேசிய சாகித்திய விருது உட்பட கவிநிலா, கவிமலர், சிறந்த பெண் ஆளுமை, சிறந்த குரல் தேடலுக்கான விருதுகள் என பல விருதுகளையும் ஐம்பதிற்கும் மேற்பட்ட சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்.

எதிர் வரும் காலங்களில் இறைவன் நாடினால் இலக்கிய உலகிற்கும் ஊடக உலகிற்கும் முதல் தரமான படைப்புகளைத் தரவேண்டும், வாசகர்கள் ரசிகர்கள் வட்டத்தில் எப்போதும் நல்ல பிப்ராயம் கொண்ட ஒரு கலைஞராக வலம் வரவேண்டும் என்ற அவாவோடு பயணிக்கும் கவிதாயினி சியாவின் பயணம் வெற்றி பெற வாழ்த்துக்கள்.

# மாணவர்களுக்கான தேசிய டிஜிட்டல் நூலகம்



மாணவர்களுக்கான தேசியடிஜிட்டல் நூலகம் மத்திய அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் லிங்க் **https://ndl.iitkgp.ac.in.** இதில் பதிவு செய்து ஆரம்ப பாடம் முதல் சட்டம், அறிவியல், இலக்கியம், பொறியியல் , மருத்துவ மாணவர்கள் பயன் பெறலாம். மேலும் இந்த நூலகத்தில் 4.60 கோடி புத்தகங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் கண்டுபடித்துப் பயன்பெறுக..




# மாணவர்கள் Zoom-WhatsApp கற்பித்தல் –எதிர்கொள்ளும் உள–நெருக்கடிகள்




வாரத்தில் ஏழு நாட்களும் அதிகாலை 4.00 தொடக்கம் பி.ப 7.00 மணி வரை பாடசாலை மற்றும் பிரத்தியேக **Zoom** மற்றும் **WhatsApp** கற்றலில் பங்கு கொள்வதால் உடல் சோர்வு மற்றும் உளநெருக்கடிக்கு உள்ளாகி வருகின்றனர். அனேக ஆசிரியர்கள் ஒரே நாளில் அதிகளவு செயலட்டைகளை **WhatsApp** மூலம் வழங்குவதால், அதனை பிரதி பண்ணி விடையளிக்க சிரமப்படுகிறார்கள்.

**Zoom** வகுப்பில் பங்கு பற்றும் மாணவர்கள் திரன் கைபேசியை கண்ணுக்கு மிக அருகில் வைத்துக் கொள்வதால், எதிர காலத்தில் குறும்பார்வை நோய் ஏற்படும் பேராபத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

கண்ணின் அண்மைப் பார்வைத்தூரம் **25cm** ஆக இருப்பதால், கண்ணுக்கு அருகில் வைத்துக் கொள்வதால் பேராபத்து ஏற்படலாம். நீண்ட நேரம் திரன் கைபேசி மூலம் கற்கும் மாணவர்களுக்கு தலையிடி,கண் வீங்குதல் போன்ற உபாதைகள் ஏற்படுகின்றன. ஒரிடத்தில் அசையாமல் நீண்ட நேரம் அமர்ந்து இருப்பதால் முள்ளந்தண்டு பிரச்சினைகள் ஏற்படும் திரன் கைபேசியின் கதிரியக்க வீச்சு காரணமாக மூளை மற்றும் கண் சார்ந்த நோய்கள் ஏற்படலாம். ஆனாலும் கொவிட் காலப்பகுதியில் வேறுவழியில்லாமல் கற்கவேண்டிய நிர்ப்பந்தம்.

# ஆயிஷாவின் குரல்




தலைப்பைப் பார்த்தவுடன் யார் இந்த ஆயிஷா என்ற கேள்வி உங்களுக்குள் வரலாம். ஆம் அவள் கேள்விகளின் வடிவமாகத் திகழ்பவள். இரா.நடராசன் எழுதிய குறுநாவலுக்கு உயிர் கொடுத்தவள்தான் இந்த ஆயிஷா. பதினைந்து வயது சிறுமி. ஏவுகணை வேகத்தில் சிந்தித்து கேள்விக்கணைகளாக வகுப்பில் வலம் வந்த பள்ளிச் சீருடையணிந்த விஞ்ஞானி. அன்று அவளின் கேள்விகளின் உஷ்ணம் ஒவ்வொரு ஆசிரியர்களையும் சுட்டிருக்கக் கூடும். அதனால்தான் அந்த பிஞ்சு உடலுக்கு ஆசிரியர்கள் கொடுத்த பதில் பிரம்படி. ஆசிரியர்களின் பிரம்படிக்குச் சொந்தக்காரியவள்.ஆனால் தன்னுடைய கேள்விகளுக்கு விடை கிடைக்கும் வரை தேடிக் கொண்டிருப்பவள். ஒரு வித அறிவியல் விஞ்ஞான ஆய்வு அவளுக்குள் ஊஞ்சளாடிய காலம், அவளுடைய பள்ளிக் காலம். துருத்திய பற்களோடும், களைந்த கேசத்தை கோதி முடியக் கூட நேரமில்லாமல் ஐம்பத்தெட்டு மாணவிகளில் ஒருத்தியாய் அமர்ந்திருக்கும் பத்தாம் வகுப்பு மாணவி.

ஒரு நாள் வகுப்பில் காந்தவியல் பற்றியும் அதனுடைய இயல்பு பற்றியும் பாடம் நடக்கிறது. திடீரென எழும்பி மிஸ்... காந்தத்தை சிறு சிறு துண்டுகளாக வெட்டினால் என்ன நடக்கும்? என்ற ஒற்றைக் கேள்வியை முன் வைத்தாள். உறங்கிக் கொண்டிருக்கும் அத்தனை மாணவிகளையும், ஆசிரியையையும் ஒற்றைக் கேள்வியால் தட்டி எழுப்பிய வித்தையை எங்குதான் கற்றாளோ தெரியவில்லை. அவளுடைய கேள்விக்கு பதில் கூற முடியாது இரண்டு துண்டுகள் எனக் கூறி வார்த்தைகளால் அலம்பிய படி வெளியேறினார். இருப்பினும் ஆயிஷா அவரைப் பின்தொடர்ந்து கேள்விகளைத் தொடுக்கிறாள். பின்னர் வுசரவா ழக அநபநெவள வெட்ரோட் ஸ்டூடண்ட் கிங்ஸ்லி எழுதிய புத்தகத்தை நீட்டி இதனை வாசிக்குமாறு அவரின் அறிவுக் கண்களைத் திறந்தாள். அன்றுதான் யாருமே புரிந்து கொள்ளாத ஆயிஷாவை அந்த ஆசிரியை புரிந்து கொண்டார். ஆயிஷாவின் அறிவுக்கு அடிமையாகினார். அன்பிற்கும், ஆறுதலுக்கும், சோகத்திற்கும் ஆயிஷா தேடியதும் அந்த ஆசிரியையைத்தான்.

வரலாறு, கெமிஸ்ரி, மெதமெடிக்ஸ் என்று ஒவ்வொரு பாட ஆசிரியர்களின் பிரம்படியின் தழும்புகள் அவளை சிறுக சிறுக அசைத்துப் பார்க்கத் தொடங்கியது.பழுதடைந்த வானொலியொன்று அவளிடம் இருந்தது. அதை விடுமுறை நாட்களில் செய்து பார்ப்பதிலே காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தாள். தன் அன்பு ஆசிரியையிடம் அவள் கேட்கும் கேள்விகள் அவரை ஒரு புத்தகப் புழுவாக்கியது. மெழுகுவர்த்தியாய் அவளிருந்து ஆசிரியைக்கு ஒளி கொடுத்தாள்.

துணி துவைக்கும் சோப்பும் அழுக்கை நீக்குகிறது. குளியல் சோப்பும் அழுக்கை நீக்குகிறது. இரண்டிற்கும் என்ன வித்தியாசம்? மெழுகுவர்த்திக்கு ஒளி அதிகமாகவும், வெப்பம் குறைவாகவும் உள்ளது. ஆனால் ஒரு அடுப்பில் எரியும் நெருப்பின் ஒளி குறைவாகவும் வெப்பம் அதிகமாகவும் இருக்கிறதே ஏன் மிஸ்..

மின்னலிலிருந்து மின்சாரம் தாக்கும் இல்லையா? மரம் கூட விழுவதுண்டு. கம்பியிலுள்ள மின்சாரத்திற்கும் அதுக்கும் என்ன வித்தியாசம்? எப்படி மின்சாரம் பரவுகிறது? இப்படி அவள் கேட்ட ஒவ்வொரு கேள்விகளும் அவரை தேடலின்பால் கொண்டு சென்றது. எந்தவோரு பாடத்திற்கும் டீயூசன் போகாதவள், பொருளாதாரத் தடை, தாயில்லை, சித்தியின் வளர்ப்பு. இவைகளில் எதுவும் அவளுடைய அறிவை முடக்கவில்லை. அவளுடைய தேடல்களை கெடுக்கவில்லை. மாறாக எதிர் நீச்சல் போட்டாள். பத்தாம் வகுப்பு மாணவியான இவள் பதினொராம் வகுப்பு கணக்குப் போட்டு அடிவாங்கினாள். வரலாறு ஆசிரியரிடம் கேள்வி கேட்டு தானே விடையையும் கூறி உதை வாங்கினாள். இப்படி ஆசிரியர் பேசியதை விட அவர்களின் பிரம்புகள்தான் அவளோடு அதிகம் பேசியது.

அன்று வகுப்பில் நைட்ரஸ் ஆக்சைட்டு வாயுவைப் பற்றிய பாடம் நடக்கிறது. அது அறுவை சிகிச்சையின் போது வலிக்காமலிருக்க உடலை மரத்துப் போக வைக்கும் ஆக்சைட்டு. ஹம்பிரி டேவியின் கண்டுபிடிப்பு. இது குறித்து கேள்வி கேட்டு போதிய விளக்கத்தினைக் கேட்டறிந்தவள் இதனோடு சேர்த்து தன்னுடைய உயிர்ப்பான கேள்விகளுக்கும், பிரம்பின் கொஞ்சல்களுக்கும் ஒரு முற்றுப் புள்ளி வைத்தாள். ஆயிஷா வேதியல் ஆய்வு கூடத்திலிருந்து தன்னுடைய ஆசிரியையை அழைக்கிறாள். இன்று எக்ஸ்பரிமண்ட் சக்ஸஸ் என்கிறாள். ஒரு ஸ்கேலை நீட்டி தன்னை அடிக்குமாறு கூறுகிறாள். ஆசிரியை திகைத்துப் போகிறார். லேபிலிருந்த நைட்ரைட்டு ஆக்சைட்டை எடுத்து ஊசி மூலமாக தவளைக்குச் செழுத்துகிறாள். பின்பு தவளையின் உடல் மரத்துப் போகிறது. அதனை அறிந்து தனக்கே அந்த ஊசியை செழுத்துகிறாள். பிரம்படியிலிருந்து தப்பிக்க நினைத்து காலான் பிடியில் மாட்டிக் கொண்ட அவளை என்னவென்று சொல்வது? அவள் உயிர் உடலை விட்டு மெல்ல மெல்ல விடை பெற்றது. ஆசிரியரின் கதரல்களோடு. இதுதான் ஆயிஷாவின் கதையின் சுருக்கம்.

### இனி ஆயிஷாவின் குரல்

அன்பான ஆசிரியர்களே! என்னைப் போன்று எத்தனையோ ஆயிஷாக்கள் வகுப்பிலிருக்கலாம். அவர்களை வரவேற்றுக் கொள்ளுங்கள். அவர்களுடைய கேள்விகளுக்கு மதிப்பளியுங்கள். அவர்களைத் தேடவிடுங்கள். நீங்களும் தேடிக் கொண்டிருங்கள். கேள்வி கேட்பவர்களுக்கு அங்கிகாரம் வழங்குங்கள். அவர்களைப் பார்த்து ஏனைய மாணவர்கள் வளரட்டும். கேள்விகள்தான் தேடல்களின் தொடக்கம். அது அறிவைக் கூர்மையாக்கும் ஆயுதம். திசைமாறிப் போகின்ற இந்த சமுதாயத்தில் மாணவர்களின் சிந்தனைகளும், நல்ல எண்ணங்களும், ஆக்கத் திறன்களும் இருப்பின் அதனை சரியான பாதையின் பால் இட்டுச் செல்லுங்கள். அவர்கள் அசையாத் தூண்களாக நிலைக்கட்டும். பிரம்புகளின் நெருக்கத்தை சற்று ஒத்திவையுங்கள். சிலவேளைகளில் அவை மூர்க்கத் தனத்தைக் கொண்டு வரலாம்.

பத்தாம் ஆண்டு படிக்கும் மாணவி பதினோராம் ஆண்டு படிக்கும் மாணவர்கள் செய்யக் கூடிய வேலையைச் செய்தால் அவர்களைப் பாராட்டுங்கள். அவர்கள்தான் மீதிறன் கூடிய மாணவர்கள். அவர்களின் முயற்சிக்கு திறவுகோளாக இருங்கள். புத்தகத்தின் குறிப்புக்களைத் தாண்டி தர்க்கிக்கும் ஆற்றலை வளர்க்க வழிகாட்டுங்கள். தானே விளங்கி எழுதும் சூட்சமத்தைப் புலப்படுத்துங்கள். அவர்களின் குறும்புகளை இரசியுங்கள். தவறுகளை பெரிதுபடுத்தாதீர்கள். அதனை ஆசிரியர் ஓய்வறையில் ஓதாதீர்கள். மாணவர்களை மதியுங்கள். அவர்கள் பருவ வயதை அடைந்தால் நீங்கள் பக்குவத்தைக் கடைபிடியுங்கள். அந்த வயதிலிருந்து வந்தவர்கள்தானே நீங்களும். ஏழு மணி நேரப் பெற்றோர்களாக மனதார சஞ்சரியுங்கள். அப்போதுதான் உங்கள் அரவணைப்பைத் தேடுவார்கள். பெண் மாணவிகளை குறை கூறி முடக்கி விடாதீர்கள். அவர்கள் இச் சமூகத்தின் வெளிச்சம். நான் கேட்ட கேள்வி இது இந்த சமூகத்தில் மேரிகியூரி அம்மையாரைப் போலவும், கரோலின் ஏங்கில்ஸைப் போலவும் நம்ம நாட்டுப் பெண்கள் பெயர் சொல்கிற அளவுக்கு ஒரு பெண் கூட விஞ்ஞானியாக வரமுடியவில்லையே ஏன்?

சிறுவயதில் பெற்றோரின் தட்டிக் கொடுப்பும், பாதுகாப்பும், பரிசுத்தமான அன்பும் அவர்களுக்கு அவசியம். பின்னர் பள்ளியில் ஆசிரியர்கள் அரவணைப்பையும், அன்பையும், பாராட்டையும், தெளிந்த அறிவையும், ஒழுக்கத்தையும் அவர்களுக்குக் கொடுங்கள். அவர்கள் சிறந்த மாணவர்களாவார்கள். ஆசிரியரின் பிரம்படியிலிருந்து தப்பிக்க எண்ணியே நான் மாண்டு போனேன். என்னை விட்டிருந்தால் இன்று மேரி கியூரிக்கு அடுத்த படியாக ஆயிஷாவின் பெயரை வரலாறுகள் எழுதியிருக்கும். உங்களுடைய வகுப்பில்தான் மேரிகியூரி, கல்பனா சௌலா, வெலன்டினா தெரஸ் கோவா, ரொஷாளின் ஃராங்கிலின், லீஸ் மைட்னர், கத்தரின் ஜோன்சன், கிராஸ் கொப்பர், ரொபின், சிப்லா மெரியன், ஜெம்சன், மேரி ஜீவிஸ் என்று பற்பல விஞ்ஞானிகள் அமர்ந்திருக்கிறார்கள். வழிகாட்டுங்கள். வாழ்வார்கள்.

ஆயிஷா என்ற சிறுகதை என் மனதில் ஒரு வித நெருடல்களை ஏற்படுத்தி விட்டது. என் உச்சி முதல் பாதம் வரை என்னுள் உறங்கியிருக்கும் அறியாமைகளை உணர்வுகளோடு தட்டியெழுப்பி சலவை செய்து விட்டது. அவள் மூலம் நிகழ்ந்த மாற்றமே என்னை அவளை நோக்கி எழுத்தாணியைத் துக்க வைத்திருக்கிறது. இனி என்னிடம் எத்தனை ஆயிஷாக்கள் வந்தாலும் அத்தனை ஆயிஷாக்களையும் பேரன்பு கொண்டு நேசித்து அவர்களுக்குத் தேவையான நேரத்தில் தாயாகவும், தவறுகள் நிகழும் போது தட்டிக் கேட்கும் தந்தையாகவும், குறும்புகள் செய்யும் போது தோழியாகவும், சந்தேகங்களின் போது அறிவைத் தெளிய வைக்கு ஆசிரியையாகவும், உணர்வுப் பூர்வமாக செயல்ப்பட்டு மாணவச் சமுதாயத்தை அறிவாயுதம் ஏந்தியவர்களாக மாற்றும் இச்சேவையை மனதாரச் செய்வேன். இக்கதையினுடைய தாக்கம் உங்களைப் பாதித்திருந்தால் நீங்களும் நல்லாசானாகத் திகழ்வீர்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அந்த ஆயிஷா உங்களுக்குள்ளும் ஒளிர்வாள்.

-க.மங்களேஸ்வரி-
திருகோணமலை

# மனித வாழ்வை நாசப்படுத்தும் புகையிலை பாவனை

உலக சுகாதார நிறுவனம் சில விடயங்களை (நோய்க்காரணிகளை) சுட்டிக்காட்டி அதற்கான தினங்களை நிர்ணயித்து அதனை வருடாவருடம் நினைவு படுத்தி வருகின்றது, இதற்கான காரணம் அந்த விடயம் அல்லது நோயினால் மனித இனம் பாதிப்புறாமல் இருக்கும் விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதாகும். இந்த வகையில் 1987இல் இருந்து மே 31 உலக புகையிலை தினமாக பிரகடணப்படுத்தி இதன் பாதிப்புக்களை மக்களுக்கு வெளியிட்டு வருகின்றனர்.



இருப்பினும், இதன் பாவனையாளர்களின் தொகையும், பாதிக்கப்படுபவர்களின் வீதமும் அதிகரித்து வருவதாக உலக சுகாதார நிறுவனத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் முக்கிய விடயமாக நாம் பார்க்க வேண்டியது, இதனை பாவிப்பவர்களுக்கு மேலாக (புகைத்தல்) பக்கத்தில் உள்ள பெண்கள், சிறுவர்களும் இதன் பாதிப்பை எதிர் கொள்ளவதும் ஓர் ஆபத்தான விடயமே.

நாம் ஆரம்ப காலத்தில் புகையிலை மெல்தல், புகைத்தல் போன்ற விடயங்களை பொழுது போக்காகவும் ஏதோ ஓர் உணர்வின் அடிப்படையிலும் ,சிலர் நாகரீகமாகவும், ஓர் சமூக அங்கிகரிப்பாகவும் கருதி இதனை அநாவசியமாகவே ஆரம்பிக்கின்றோம். பின் இதிலுள்ள ஒரு போதைப் பொருளுக்கு நாம் அடிமையாகி இதனை தொடர்வதுடன், நாளடைவில் இதில் இருந்து விடுபட முடியாமல், இது நமக்கு கட்டாய உணவு போலவும், இது இல்லாமல் இயங்க முடியாத புகைப்பழக்க அடிமையாக மாறி விடுகின்றோம்.

மெல்லும் புகையிலைகளான பான்பராக் ஹான்ஸ், குட்கா, தம்பக் போன்றவற்றில் 300 விதமான உடலுக்கு நஞ்சாக கருதும் மூலக்கூறுகள் உள்ளதாகவும், பீடி சிகரட் போன்றவைகள் தயாரிக்கும் புகையிலையில் 4000 விதமான நஞ்சுக் கூறுகள் உள்ளதாகவும் எச்சரிக்க படுகின்றோம். புகை பிடிப்பவர்களில் 90வீமானவர்கள் குரல்வளை, நுரையீரல் உபாதைகளுக்கு உள்ளாகின்றனர்.

புகையிலையினால் வாய், தொண்டை, நுரையீரல், மூச்சுக்குளாய், உணவுக்குளாய், சிறுநீரகம், சிறுநீர்ப்பை, இணையம், கர்ப்பபையின் வாய் போன்ற உறுப்புக்கள் பாதிக்க படுவதாகவும், புற்று நோய்க்கான காரணியாக இது மாறுவதாகவும் கூறப்படுகின்றது.

மாரடைப்பு ஏற்படுவோரில் பெரும்பாலானோர் புகைத்தல் பழக்கம் உள்ளவர்கள் என்பதும் உண்மையென நிருபிக்கப்பட்டுள்ளது.ஆகவே நாம், எமது குடும்பம், சூழல் போன்றவற்றில் அக்கறை கொண்டு புகையிலை மெல்லுதல், புகை பிடித்தல் போன்ற விடயங்களில் இருந்து பாதிக்கப்பட்டோரை மீட்கவும், மற்றவர்களை இப்பழக்கத்திற்கு அடிமையாகாமல் தடுக்கவும் மக்கள் மத்தியில் இதன் பாதிப்புக்களை எடுத்துரைத்து விழிப்புணர்வுகளை உண்டுபண்ணுவோம்.



# உலக யோகா தினம் ஜூன் 21

யோகா ஆசிரியர்
கலாபூஷணம் கா. சந்திரலிங்கம்

சென்ற 2015ஆம் ஆண்டு இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் ஐக்கிய நாடுகள் சபையில் யோகா பற்றி ஆற்றிய உரை உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்ததன் காரணமாக உலக நாடுகளின் எதிர்ப்புகள் எதுவும் இன்றி ஐக்கிய நாடுகள் சபை ஜூன்21ஐ யோகா தினமாக நிறைவேற்றியது. யோகம் என்பது பூரணத்துவம் வாய்ந்த வியக்கத்தகு மாபெரும் விஞ்ஞானம் என்பதை உலக நாடுகள் உணர்ந்து கொண்டன.

ஒரு மனிதனை மிருக நிலையிலிருந்து தெய்வீக நிலையை அடையச் செய்வதற்கு உறுதுணையாக யோகம் அமைகிறது. எல்லா இனத்தவர்களுக்கும் பொதுவானதாக யோகம் திகழ்வது இதன் ஒரு சிறப்பம்சமாகும். ’சித்தத்தின் விருத்திகளை ஒடுக்குவது யோகம்’என பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரம் கூறுகின்றது. யோகம் என்றால் இணைதல், ஒன்றுபடுதல் எனப் பொருள்படும். அதாவது ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்துகின்ற அற்புத சாதனம் யோகம் என கூறலாம்.

உடல் , மனம் இரண்டையும் உறுதியாக்கி ஆரோக்கியம் தருவதுயோகம். இதில் எட்டு படிகள் காணப்படுகின்றன. இயமம்அஹிம்சை பற்றியும், நியமம் உடல், உளத்தூய்மை பற்றியும்,ஆசனம் ஆரோக்கியத்திற்கான இருக்கை பற்றியும், பிராணயாமம் மூச்சை ஒழுங்குபடுத்துகின்றமுறை பற்றியும், பிரத்தியாகாரம் மனதினை பொருட்களில் செல்லாது தடுத்தல் பற்றியும்,தாரணை: மனதை ஒன்றுபடுத்தல் பற்றியும், தியானம் ஒன்றுபடுத்திய மனதை ஒருநிலைப்படுத்துவது பற்றியும்,சமாதிஇ றையோடு ஒன்றிணைவது பற்றியும் கூறுகின்றது.மனித சமுதாயத்தினிடத்தில் அன்பு, திறமை, ஒருங்கிணைப்பு, ஒற்றுமை, பேரானந்தம், ஆரோக்கியம், சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுப்பு, போன்றவற்றை உருவாக்குவதோடு சாதி மதத்துக்கு அப்பால் மனிதநேயத்தை மேம்படுத்த யோகம் உதவுகின்றது.

தற்போதைய நெருக்கடியான காலகட்டத்தில் மனிதன் மன அழுத்தம், சஞ்சலம், பதகளிப்பு, நிம்மதியற்ற நிலை, போதைப் பொருள் பாவனை, கொடிய நோய்கள் போன்ற பல்வேறுபட்ட துன்பங்களிலிருந்து விடுபட்டு நீண்ட ஆயுளையும், ஆரோக்கியத்தையும், மன அமைதியையும், மகிழ்ச்சியையும் கொடுக்கக்கூடியதாக யோகம் அமைகின்றது. யோகத்தில் காணப்படுகின்ற ஆசனம், பிராணயாமம், தியானம் போன்றவற்றைத் தொடர்ந்து செய்தாலே ஒரு மனிதன் முழுமையான ஆரோக்கியத்துடன் வாழலாம். இவைகளை எளிதில் பயின்று செய்யக்கூடிய முறையில் யோகா ஆசிரியர்கள் நெறிப்படுத்தித் தருவார்கள் என்பதனால் சிறந்த யோகாசன ஆசிரியர்களிடம் யோகத்தை கற்று பலன் பெறுவோம்.

# விட்டமின் டி ஊட்டச்சத்து பற்றாக்குறை மார்பக புற்று நோயை ஏற்படுத்துகிறதா?






விட்டமின் டி ஒரு அத்தியாவசியமான வைட்டமின் ஆகும். உடலுக்கு தேவையான விட்டமின்களில் இதுவும் ஒன்றாக உள்ளது. ஆனால் வைட்டமின் டி உடலுக்கு தீங்கு விளைவிப்பதாகவும் சில வதந்திகள் உண்டு. முக்கியமாக பெண்களுக்கு இதனால் புற்று நோய் ஏற்படுகிறது என்கிற ஒரு வாதம் இருந்து வருகிறது. எனவே உண்மையிலேயே வைட்டமின் டி யால் அப்படியான பிரச்சனைகள் வருகிறதா? என பார்ப்போம்.

உடலுக்கு தேவையான அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களில் வைட்டமின் டி யும் ஒரு ஊட்டச்சத்தாக உள்ளது. வைட்டமின் டியை நாம் பல வழிகளில் பெறுகிறோம். முக்கியமாக சூரிய ஒளியின் வழியாக நம்மால் வைட்டமின் டியை பெற முடியும். ஆனால் சிலர் வைட்டமின் டி பெண்களுக்கு தீங்கு விளைவிப்பதாக கூறுகின்றனர். முக்கியமாக இது பெண்களுக்கு மார்பக புற்றுநோயை ஏற்படுத்துகிறது என சிலர் கூறுகின்றனர்.

# ஒழுங்கற்ற மாதவிடாய்க்கு புதினா!

புதினா வாசனை மிக்க உணவாக பயன்படுத்துகிறோம். ஆனால் இதை கொண்டு வைத்தியமும் செய்ய முடியும்.புதினா மிளகு கீரை என்றும் இது சொல்லப்படுகிறது. புதினா இலைகளை கொண்டு தயாரிக்கும் புதினா துவையல் பலமான விருந்தில் கண்டிப்பாக இருக்கும்.இது செரிமானத்தை தூண்டுகிறது. புதினாவை வாசனை மிக்க தயாரிப்புகளில் சேர்க்கிறார்கள். புதினாவிலிருந்து எடுக்கப்படும் புதினா எண்ணெய் இயற்கை வைத்தியங்களில் பயன்படுத்தப்படுகிறது.

புதினாவில் புரதம், கொழுப்பு, கார்போஹைட்ரேட், நார்ச்சத்து, உலோகச்சத்து. கால்சியம், இரும்பு, பாஸ்பரஸ், வைட்டமின் ஏ, நிக்கோட்டினிக் ஆசிட், ரைபோ மினெவின் தயாமின் போன்ற சத்துகளும் அடங்கியுள்ளது. இதை எப்படி எடுத்துகொண்டாலும் இதன் குணங்கள் மாறாது என்பதோடு இதை எப்படி உணவில் சேர்த்தாலும் சுவை அதிகரிக்க கூடும். இந்த புதினாவை கைவைத்தியத்துக்கு எப்படி பயன்படுத்தலாம் என்பது குறித்து தான் இப்போது பார்க்க போகிறோம்.

புதினா இலையை சுத்தம் செய்து உரலில் இட்டு இடித்து அதன் சாறை பிழிந்து எடுக்கவும். இதை வடிகட்டி ஒரு பெரிய டம்ளரில் எடுத்து அதனுடன் நாட்டுமருந்து கடையில் கிடைக்கும் சீமைக்காடி அல்லது ஒரு டம்ளர் நீர் சேர்த்து இந்த திரவத்தில் மூன்று மடங்கு சர்க்கரை கலந்து அடுப்பில் மிதமான தீயில் வைத்து காய்ச்ச வேண்டும்.பாகு பதம் வரும் போது காய்ச்சி இறக்கி கண்ணாடி பாட்டிலில் சேமித்து வைக்கவும்.

கர்ப்பகாலத்தில் வாந்தி வரும்போது ஒரு டீஸ்பூன் அளவு அப்படியே வாயில் போட்டு அடக்கி சிறிது சிறிதாக உமிழ்நீரோடு கலந்து விழுங்க வேண்டும். இப்படி செய்தால் வாந்தி உணர்வு இருக்காது. கர்ப்பிணிகளுக்கு மட்டும் இல்லாமல் வாந்தி வரும் அனைவருமே இதை சாப்பிடலாம்.

# அனைத்து புகழும் சன் தொலைக்காட்சியையே சாரும்

## செய்தி வாசிப்பாளர் சுமித்ரா





சிறந்த தமிழ் உச்சரிப்புக்களாலும், கணீர் என்ற குரலாலும் அறிவிப்பாளர்களும், செய்தி வாசிப்பாளர்களும் தொலைக்காட்சி நேயர்களை தம்வசம் ஈர்த்து வருகின்றனர். அந்த வகையில் உலகத் தமிழ் நேயர்கள் மத்தியில் பிரபலம் பெற்றுள்ள சன் செய்திகள் தொலைக்காட்சி அலைவரிசையானது சிறப்பானதாகக் காணப்படுகிறது. சன் தொலைக்காட்சி சிறந்த தனித்தன்மை வாய்ந்த செய்தி வாசிப்பாளர்களை தன்னகத்தே கொண்டுள்ளது என்றால் அது மிகையாகாது. அந்த வகையில் தனது கணீர் என்ற குரலினாலும், தமிழ் உச்சரிப்பினாலும் அனைவரையும் ஈர்த்த் சன் தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளரான சுமித்ரா விளங்குகிறார். இவரை அவரது இல்லத்தில் நேர்காணும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. இலங்கையின் கல்முனை நெற மின்னிதழுக்காக தனது அனுபவங்களை பகிர்ந்துகொண்டார்.

**முதலில் உங்களைப் பற்றிய ஒரு சிறு அறிமுகத்தைத் தாருங்கள்?**

இலங்கை நேயர்களுக்கு எனது கருத்துக்களைக் கொண்டு செல்ல உதவியமைக்காக நான் முதலில் இந்தப் பத்திரிகைக்கு நன்றிகளை கூறிக் கொள்ள விரும்புகிறேன். தமிழ் நாட்டின் செங்கல்பட்டு மாவட்டத்தின் மதுராந்தகம் என்பது எனது ஊராகும். தந்தையும், தாயும் அரச பணியாளர்களாக இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் எனக்கும் அரச பணியில் இணைந்து கொள்ள வேண்டும் என ஆர்வம் இருந்தது. சென்னை பல்கலைக்கழகத்தில் எம்.சி.ஏ. பட்டத்தை நிறைவு செய்து கொண்டு இந்து சமய அற நெறித் துறையில் பணியில் சேர்வதற்கு தேர்வு எழுதினேன். தேர்வில் வெற்றி பெற்றாலும், வெறறிடங்கள் குறைவாக இருந்ததனால் என்னால் அரச பணியில் இணைய முடியவில்லை. இதனையடுத்து 2008ம் ஆண்டு பொதிகை தொலைக்காட்சியில் இணைந்து கொண்டேன். அங்கு செய்தி வாசிப்பாளராக கடமையாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது என பெருமையுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இதுவே எனைப் பற்றிய ஒரு சிறிய அறிமுகமாகும்.

**நீங்கள் தற்போது உலகப் பிரபல்யம் வாய்ந்த சன் தொலைக்காட்சியில் முன்னணிச் செய்தி வாசிப்பாளராக இருக்கின்றீர்கள்? அது பற்றிக் கூறுங்கள்?**

2011ம் ஆண்டு முதல் சன் தொலைக்காட்சியில் எனது பயணம் தொடர்கிறது. அன்று முதல் இன்று வரை என்னை மெருகேற்றிக் கொண்டு தமிழை செழுமைப்படுத்திக் கொண்டு நான் எனது பாதையில் பயணிக்கிறேன். எனது செய்தி அறிவையும் நான் மேலும் மேம்படுத்திக் கொள்கின்றேன். செய்தி வாசிப்பதுடன் மாத்திரமன்றி அதையும் தாண்டி எழுத்துத் துறையிலும் நான் கவனம் செலுத்தி வருகின்றேன். எனது செய்தி வாசிப்பைப் பார்த்து விட்டு சர்வதேச அளவில் எனக்கு பாராட்டுக்கள் குவிகின்றன. சன் தொலைக்காட்சி உலகளாவிய தொலைக்காட்சி என்பதனால் உலகெங்கிலும் பரந்து வாழும் தமிழ் ரசிகர்கள் எம்மை அடையாளம் காண்கின்றனர். எமது தமிழ் உச்சரிப்பைப் பார்த்து விட்டு அவர்கள் எம்மைப் பாராட்டுகின்றனர். இந்த அனைத்து புகழும் சன் தொலைக்காட்சியையே சாரும் எனக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

**நீங்கள் செய்திகளை வாசிக்கும் போது உங்களுக்குப் புதிய அனுபவங்கள் கிடைக்கும். அது பற்றிக் கூறுங்கள்?**

ஒவ்வொரு நாளும் செய்திகளை வாசிக்கும்போது நாங்கள் புதிய அனுபவங்களைப் பெற்றுக் கொள்கிறோம் என்பது உண்மை. சில அனுபவங்கள் சந்தோஷமானதாகவும், சில அனுபவங்கள் சோகமானதாகவும் இருக்கும். எப்படி இருப்பினும் நாங்கள் செய்திகளை உணர்ச்சிவசப்படாமல் வாசித்தல் வேண்டும். இயல்பாக செய்திகளை வாசிக்க வேண்டும். பெண்கள் மற்றும் சிறுவர் மீதான வன்முறைச் சம்பவங்கள் குறித்த செய்திகளை வாசிக்கும்போது மனம் வலிக்கும். எனினும் உணர்வுளை வெளிக்காட்டுவதில்லை.

**நீங்கள் அதிகளவில் ஆன்மீகப் பற்றுக் கொண்டவர் எனவும் எழுத்தாற்றல் மிக்கவர் எனவும் கேள்விப்பட்டிருக்கிறோம். அது பற்றிக் கூறுங்கள்?**

எனக்கு இயல்பாகவே ஆன்மீகத்தில் ஆர்வம் அதிகம். எந்த ஊருக்குச் சென்றாலும் அங்குள்ள ஆலயங்களுக்குச் செல்லத் தவறுவதில்லை. ஆன்மீகம் சார்ந்த நேரலை நிகழ்ச்சிகளையும் சன் செய்தியில் தொகுத்து வழங்கியுள்ளேன். என் பணியின் மீதான பற்றுதல் காரணமாக முதுகலை இதழியல் பட்டப்படிப்பை பூர்த்தி செய்துள்ளேன். தமிழ் மீதான பற்றுதல் காரணமாக கதை, கவிதை போன்றவற்றை எழுதியுள்ளேன். இதுவரை 4 கதைகளை எழுதி வெளியிட்டுள்ளேன். சிறுகதைத் தொகுப்பொன்றை எழுதி வெளியிட உள்ளேன்.

**செய்தி வாசிப்பில் முக்கிய அம்சம் எதுவென நீங்கள் கருதுகிறீர்கள்?**

செய்தி வாசிப்பாளர்கள் தமது செய்தி வாசிப்பின் மீது அதிக அக்கறை கொண்டிருத்தல் வேண்டும். அனைவரும் நம்மை அவதானிக்கின்றனர் என்ற எண்ணம் நமக்குள் எழவேண்டும். சிறந்த மொழி உச்சரிப்பை வெளிப்படுத்த வேண்டும். செய்தி வாசிப்பாளர் எந்தவொரு விடயத்தையும் மிகைப்படுத்திக் கூறாமல் உள்ளதை உள்ளபடி வாசிக்க வேண்டும். அகில இந்திய வானொலியில் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்திருப்பதனால் செய்தியை எழுதுவது தொடர்பான அனுபவமும் எனக்குண்டு. என்னுடைய பணிக்கு உறுதுணையாக இருக்கும் இறைவனுக்கும், எனது குடும்பத்திற்கும் நன்றிகளைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

**நேர்காணல்: கிரிஷாந்த்**

# ஸ்கேன் சோதனையில் சிக்காத அதிசயம்



**படையல்**

**எம்.எம்.விஜிலி**

தென் ஆபிரிக்காவில் ஒரே பிரசவத்தில் 10 குழந்தைகளைப் பெற்றிருக்கிறார் தாய் ஒருவர்.இவ் விடயம் அண்மைக்காலத்தில் நிகழ்ந்த உலக சாதனையாக கருதப்படுகிறது. தென் ஆபிரிக்காவில் டோரியா என்ற பகுதியில் அமைந்துள்ள. மருத்துவ மனையில் **Gosiame silthole** என்ற பெண்ணுக்கே ஒரே பிரசவத்தில் 10 குழந்தைகள் கிடைத்துள்ளன. 29 வாரத்தின் பின்னரான அறுவைச் சிகிச்சையில் 7 ஆண்கள் 3பெண்பிள்ளைகளுமாக அமைந்து விட்டதாக கணவர் **Teboho tsoters** தெரிவித்திருக்கிறார் மேலும் இந்த பிரசவ காலங்களில் இப் பெண் எந்த விதமான சிகிச்சைகளும் பெற்றுக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது


# சினிமாவில் ஒரு தளபதி



அரச பணியை கைவிட்டு கோடம்பாக்கத்தில் தனது பார்வையைச் செலுத்தி 1987ல் இயக்குனர் சிகரம் கே.பாலச்சந்தரின் சூமனதில் உறுதி வேண்டும்சூதிரைப்படத்தில் அறிமுகமான வேகத்திலேயே அப்படம் 100 நாட்கள் ஓடியதில் வெற்றி வாகை சூடியது.தொடர்ந்து புதுப்புது அர்த்தங்கள்.படங்கள் தூக்கலாகியது. சமூக அரசியல்..மூட நம்பிக்கைககளை தனது அதீத நகைச்சுவை உணர்வு மூலம் மிளிரச் செய்தவர்.வடிவேலின் உடல் மொழி சைகை நகைச்சுவையிலிருந்து மாறுபட்டு மெல்லிய வாயசைப்பின் மூலம் வேறுபட்ட பாணியில் நகைச்சுவையை வெளியில் கொண்டு வரும் தேவை விவேக்கிற்கு ஏற்பட்டது.

திருநெல் வேலி,மீசையை முறுக்கு ..இப்படங்கள் இப்படங்கள் இவரை உச்சத்திற்கு கொண்டு சென்றன.இவ்வாறான பிரபல்யத்தின் மூலம் சின்னக் கலைவாணர் என்ற பட்டமும் உயர்வடைந்தன.

குடும்ப ரீதியான படங்களையும் உயிரோட்டமாக்கினார்.பொங்கலோ பொங்கல்,நம்ம வீட்டுக்கல்யாணம். முக்கியமானவைகள்ீ.வாசுவின் 1993ல் வெளிவந்த உழைப்பாளி படம் மூலம் பெரும் நகைச்சுவை உணர்வை முன் வைத்தார்.ரஜனியின் வீரா படத்திலும் 2000ம் வருடம் வெளிவந்த விஜய்யுடைய குசிபடத்திலும் விவேக்கின் காமடி பெரிதும் பேசப்பட்டது. திருமலை..வெகுளி போன்ற திரைப்படங்களும் இவரால் மிளிரப்பட்டவை.1998ல் வெளி வந்த அஜித்துடைய காதல் மன்னனும் சிறப்பாக்கின.நடிகர் சந்தானத்தின் வருகைக்குப்பிறகு விவேக் சற்று தளர்வுற்றுத்திகழ்வதாக. சினிமாவில் கசியத் தொடங்கிற்று..இருந்தும் பல திரைப்படங்களில் தனது பங்கிற்கு ரசிகர்களின் தேவையைப் பூர்த்தி செய்தார்.அப்துல் கலாமின் அதீத ஈர்ப்பால் கவனத்தை திருப்பி அக்கினிச் சிறகுகள் வாசிப்பை உள்வாங்கி அப்துல் கலாமின் சிந்தனைக்குள் இரண்டறக் கலந்தவர்.சிறந்த மேடைப்பேச்சாளரான விவேக் அண்மைக்காலத்து கொரோனா காவு கொள்ளும் நிலைக்கு விவேக்கின் உயிர் கலந்து விட்டது என தமிழ் சினிமா உலகம் மூக்கில் விரல் வைத்தது.அவர் நினைவு என்றும் வாழும்



# பெண்கள் அணியும் குங்குமத்தின் அறிவியல் விளக்கம்

இன்றைய காலத்தில் திருமணமாகிய பெண்கள் குங்குமம் வைப்பதைத் தவிர்த்து ஸ்டிக்கர் பொட்டுகளை நெற்றியில் வை~க்கின்றனர். இதனால் ஏற்படுகின்ற பாதிப்பு~க்களை எதிர்நோக்கியும் அவர்கள் ஸ்டிக்~கர் பொட்டு வைப்பதை நிறுத்துவதில்லை. நவீனம் உண்மையை அழித்து விட்டது.

ஆனால் எமது முன்னோர்க~ளிடம்குங்குமம் அணியும் பழக்கம் இருந்ததனாலும் மேலும் பற்பல அறிவியல் தரும் சுகாதாரமான பழக்கங்கள் இருந்தத~னாலும் அன்றைய காலப் பெண்களின் ஆயுள் 90 வயதிற்கும் மேலாக நீடித்தது. காரணம் இந்த சுத்தமான குங்குமம்தான். சுத்தமான குங்குமத்தில் காந்த சக்~திகள் பொதுவாகவே இருக்கும். பொட்டு வைக்கும் இடத்தில் ஆக்னிஷ சக்கரம் உள்ளது. குங்குமத்தை அழுததி நெற்றியில் வைக்கும் போது ஆக்னஷ சக்~கரம் செயல்பட ஆரம்பிக்கும். இதனால் நினைவுத் திறன் அதிகரிக்கும். உடல் ஆரோ~க்கியம் அதிகரிக்கும். பொதுவாக பெ~ண்களுக்கு ஏற்படக் கூடிய நோய்கள் தாக்காமல் இருக்கவும் சூரியனில~ருந்து வரக் கூடிய கதிர்கள் நேர~டியாக அவர்களது உடலைத் தாக்காமல் இருக்கவும் குங்குமம் ஒரு பாதுகாப்புக் கவசமாக செயல்படுகிறது. அத்தோடு நல்ல சக்திகளையும் பிறப்பிக்கின்றது.

-க.மங்களேஸ்வரி-
திருகோணமலை



# கூந்தலுக்கு உதவும் நெய்

பொடுகுத் தொல்லை : நெய் மற்றும் பாதாம் எண்ணெய் இரண்டையும் நன்றாக கலந்து கொள்ளுங்கள். இந்தக் கலவையை தலையில் நன்றாக தேய்த்துக் கொண்டு ஊறவைக்கவும். பின்னர் கழுவி விடுங்கள்.

2. கூந்தல் நிறம் குறைந்திருந்தால் : எலுமிச்சை சாறுடன் நெய் சேர்த்து கூந்தலில் தேய்த்~துக்கொள்ளுங்கள். பத்து நிமிடம் ஊறியதும் குளித்து விடுங்கள். உங்கள் கூந்தலில் இயற்கையான பொலிவைப் பார்க்கலாம்.

3. இளநரை மற்றும் சொரியாசிஸ் : இளநரை மற்றும் சொரியாசிஸ் உள்ளவர்கள், மருத்~துவ குணம் கொண்ட நெய் தடவி மசாஜ் செய்து வந்தால், நல்ல தீர்வு கிடைக்கும்.

4. கூந்தல் அடர்த்திக்கு : நெய்யோடு, நெல்லிக்காய் ஜூஸ் மற்றும் வெங்காயச்சாறு சேர்த்து நன்றாக கலந்து கொள்ளுங்கள். தலையில் தேய்த்து நன்றாக மசாஜ் செய்யுங்கள். விரைவில் உங்கள் கூந்தல் உதிர்வது குறைந்து நன்றாக வளரும்.

மங்கையர் மகுடம்
ஜெனிதா மோகன்

## விடுகதைகள்

1. தலையில் கீரிடம் வைத்த தங்க பழம் அது என்ன?
2. மொட்டைப் பாட்டிக்கு உச்சியிலே குடுமி. அது என்ன?
3. என்னை நீங்கள் பார்க்கலாம், தொடலாம் ஆனால் பிடிக்க முடியாது நான் யார்?
4. அடிக்க மாட்டான் திட்டமாட்டான் ஆனால் கண்ணீரை வர~வழைப்பான் அவன் யார்?
5 கண்ணில் தென்படும் கையில் பிடிபடாது அது என்ன?



விடைகள்
1. அன்னாசி பழம்
2. தேங்காய்
3. நிழல்
4. வெங்காயம்
5. புகை

ஜி.றுபண்யா
இ.கி.ச .பெண்கள் வித்தியாலய
காரைதீவு




## எதிர்கால வாழ்வில் வெற்றி பெறுவதற்கு

அதிகாலை
1. நித்திரை விட்டு எழுப்புதல்
2.சமய அனுஷ்டானங்களில் ஈடுபடல்
3.காலைக் கடன்களை முடித்தல்
4.பல் துலக்கி முகம் கழுவுதல், குளி~த்தல்
5.காலை உணவு உண்ணல்
6.பாடசாலைக்கு செல்ல தயாராகுதல்
7.பாடசாலைக்கு செல்லல்

பகல்
1.பாடசாலை விட்டு வருதல்
2.புத்தகப் பை, சீருடை,சப்பாத்து என்பனவற்றை உரிய இடங்களில் வைத்தல்
3.கை, கால், முகம் கழுவுதல்
4.பகல் உணவு உண்ணல்
5. ஓய்வு எடுத்தல்

மாலை
1.நண்பர்களுடன் விளையாடுதல்
2.கை, கால், முகம் கழுவுதல்


இரவு
1. பாடங்களை கற்றல்
2. ஆசிரியர் தந்த வீட்டு வேலை~களைச் செய்தல்
3. இரவு உணவு உண்ணல்
4.பல் துலக்கி முகம் கழுவுதல்
5. நித்திரை க்கு செல்லல்



ஜெ.ஷருணிகா





T.யதீஷன்



K.விஜித்தா



## இலகுவில் ஓவியம் வரைவோம்



# கொரோனாவும் தற்கொலையும்



நாட்டில் கொரோனா நோயின் உச்சதாண்டவம் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு நாளும் சராசரியாக 3000 பேர் PCR பரிசோ-தனை மூலம் கொரோனா நோயாளிகள் ஆக இனம் காணப்படுகின்றனர். மேலும் சராசரியாக 40 பேர் இறந்து கொண்டிருக்கின்றனர்.இது தவிர கொரோனாவினை கட்டுப்படுத்த நடைமுறைப்படுத்தப்படும் பயணக்-கட்டுப்பாடு, தொழில் இன்மை மற்றும் தனிமைப்படுத்தல் செயற்பாடுகள், கொரோ-னா நோய்ப்பரவல் செயற்பாடுகள் மூலம் பலர் தீவிர மனஉளைச்சல்களுக்கு உள்ளா கிய நிலையில் தற்கொலை செய்கின்றனர்.

இத்தகைய செய்திகள் பெரும்பாலும் பத்திரிகைகளிலோ அல்லது சமூக ஊடகங்களிலோ வருவதில்லை. அவ்வாறு செய்தியாக வந்தாலும் தற்கொலைக்கு என்ன அடிப்படை காரணம் என்பது பற்றி தெரிய வருவதில்லை. மருத்துவர்களும் இது பற்றி அலட்டிகொள்ள வதில்லை அவர்கள் பெரும்பாலும் நேரடியாக கொரோனா நோயினால் இறந்தவர்களின் எண்ணிக்கையினை கருத்தில் கொண்டே நோய் வெற்றிகரமாக கட்டுப்படுத்-தப்பட்டது பற்றி விவாதிப்பார்கள். ஆனால்ஒட்டுமொத்தமாக கொரோனா வினால் ஏற்படும் விளைவுகளை கரு-த்தில் கொள்ளும் பொழுது இவ்வாறு ஏற்பட்ட மரணங்களையும் நிச்சயம் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

உளவள ஆலோசனை தொடர்பு இலக்கங்கள்:

குரல் அழைப்பு: 1926

குறுந்தகவல் 1926 **(8am to 4pm)**

உளவள வைத்திய நிபுணரின் ஆலோசனைக்கு

0712578578

# பாதிக்கப்பட்ட பெண்கள் தாய்ப்பால் ஊட்டலாமா?



6-24 மாதங்களு-க்கும் அதற்கு அப்பாலும் குழந்தைகளு-க்கு தாய்ப்பால் ஒரு சிறந்த உணவாக உள்ளது. **COVID**-19 உள்ள பெண்கள் அவ்வாறு செய்ய விரும்பி னால் தொடர்ந்து தாய்ப்பால் கொடுக்கலாம். எவ்வாறாயினும், அவர்கள் உணவளிக்கும் போது சுவாச சுகாதாரத்தை கடைபிடிக்க வேண்டும், கிடைக்கும் இடத்தில் முகமூடியை அணிந்து கொள்ள வேண்டும் குழந் தையைத் தொடுவதற்கு முன்பும் பின்பும் தங்கள் கைகளைக் கழுவுங்கள் மற்றும் அவர்கள் தொட்ட மேற்பரப்புகளை வழக்கமாக சுத்-தம் மற்றும் கிருமி நீக்கம் செய்தல்.

வைரஸ் அல்லது பிற சிக்கல்களால் தாய்ப்பால் கொடுப்பதில் உடல்நிலை சரியில்லாமல் இருந்தால், புதி-தாகப் பிறந்த குழந்தைகளுக்கு தாய்ப்பாலுடன் எந்த வகையிலும் பாதுகாப்பாக வழங்க தாய்மார்களுக்கு ஆதரவளிக்க வேண்டும்.

## பொது உணவு சுகாதார குறிப்புகள்

எந்தவொரு உணவையும் தயாரிப்பதற்கு முன் குறைந்தது 20 விநாடிகள் சோப்பு மற்றும் தண்ணீரில் கைகளை நன்கு கழுவுங்கள்.

சமைக்காத இறைச்சி மற்றும் மீன் தயாரிக்க பயனர் தனி நறுக்கு பலகைகள்.

பரிந்துரைக்கப்பட்ட வெப்பநிலைக்கு உணவை சமைக்கவும். சாத்தியமான இடங்களில், அழிந்துபோகக்கூடிய பொருட்களை குளிரூட்டப்பட்ட அல்லது உறைந்த நிலையில் வைத்திருங்கள், மேலும் தயாரிப்பு காலாவதி தேதிகளில் கவனம் செலுத்துங்கள்.

பூச்சிகளை ஈர்க்கக்கூடிய குப்பைகளை உருவாக்குவதைத் தவிர்ப்பது, உணவு கழிவுகள் மற்றும் பேக்கேஜிங் ஆ கியவற்றை பொருத்தமான மற்றும் சுகாதார முறையில் மறுசுழற்சி செய்ய அல்லது அப்புறப்படுத்துவதை நோக்கமாகக் கொள்ளுங்கள்.

சாப்பிடுவதற்கு முன் குறைந்தது 20 விநாடிகள் சோப்பு மற்றும் தண்ணீரில் கைகளை கழுவவும், உங்கள் பிள்ளைகளும் அவ்வாறே செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். எப்போதும் சுத்தமான பாத்திரங்கள் மற்றும் தட்டுகளைப் பயன்படுத்துங்கள்.

# பெருந்தொற்றுக்காலத்தில் மனச்சோர்வில் இருந்து விடுபடுவது எப்படி?

கொரோனா வைரஸ் குறித்து நாம் தினமும் கேட்கும் செய்திகள் நம-க்கு கவலை அளிக்கின்றது. பெரும்பா லோர், இந்த தொற்று குறித்து விரக்-தியும் அடைந்துள்ளனர் . மேலும், இதனால் உங்கள் மன நிம்ம-தி மற்றும் சந்தோஷத்தை கூட நீங்கள் இழக்க நேரிடும். அதற்காக, இனி நீங்கள் கவலைப்பட வேண்ட-ாம். ஏனென்றால், கொரோன வைர ஸின் நெருக்கடிக்கு மத்தியில் உங்களை விவேகத்துடன் வைத்திருக்க ஆறு உத விக்குறிப்புகள் உங்களுக்காக இந்த பதி வில் கொடுக்கப்பட்டு உள்துவாருங்கள் அவற்றை பற்றி தெரிந்துகொள்வோம்.

கொரோனா வைரஸ் தொற்று நோயின் 3வது அலை ஆனது, நம் அனைவ ரையும் கடுமையாக தாக்கியுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக, பெரும்பா லோர் தங்களின் நெருங்கிய உறவு-களை இழந்துள்ளனர். இந்த வைரஸை எதிர்த்துப் போராடுவதில் நாம் ஒன்றும் தனியாள் கிடையாது என்று நாம் ஆறுதல் அடைந்தாலும், இது போன்ற உலகளா விய சுகாதார நெருக்கடியைச் சமாளிப்பது என்பது ஒரு எளிதான விஷயம் அல்ல. கொரோனா வைரஸ் தொற்று இந்த கொரோனா வைரஸ் ஆனது, பல வழிகளில் நம் வாழ்க்கையை தலைகீழாக மாற்றிவிட்டது. நமக்குள் ஒரு விரக்தி இருக்கத்தான் செய்கிறது. இந்த சமயத்தில், நாம் பல விதமான உணர்ச்சிகளை அனுபவித்து வருகின றோம். அது கோபமாக இருக்கலாம் அல்லது எரிச்சலாக கூட இருக்கலாம். இந்த உணர்ச்சிகள் நம்மை சூழும்போது, அவை நம்மை கவலைக்கு உள்ளாக்குகிறது.

இது போன்ற மாற்றங்களை விரைவாக ஏற்றுக் கொள்ளக்கூடிய நபர் சிலர் உள்ளனர் மற்றவர்கள் அதிக நேரம் எடு-த்துக் கொள்வார்கள். ஆனால், அதற்காக நீங்கள் மிகவும் விரக்தியடைவது நல்லது கிடையாது. ஏனென்றால், அதில் இருந்து நீங்கள் மீண்டுவருவது என்பது மிகவும் கடினமான ஒன்றாக தெரியும். அதற் காக உங்களின் பலவிதமான உணர்ச்சி-களை நீங்கள் உணர கூடாது என்று அர்த்தமல்ல. அவற்றை ஒப்புக் கொண்டு கடந்து செல்ல முயற்சியுங்கள்.

இதற்கான சில உதவிக்குறிப்புகளைப் பற்றி தெரிந்து கொள்வோம் வாருங்கள்!

கீழே கொடுக்கப்பட்டுள்ள இந்த ஆறு உதவிக்குறிப்புகளைப் பின்பற்றுவ-தன் மூலம் உங்களை நீங்கள் விவே-கத்துடன் வைத்துக் கொள்ள முடியும்! உங்களுக்கு சந்தோசம் தரக்கூ-டிய செயல்களை செய்யுங்கள் உங்களை நன்றாக கவனித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று நீங்கள் நினைத்துக் கொண்டு இருக்கலாம். ஆனால், நீங்கள் எப்போதுமே எரிச்சல் அல்லது விரக்தியை உணர்ந்தால், உங்கள் தேவைகளுக்கு கூடுதல் கவனம் செலு-த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டு உள்ளது என்று அர்த்தம். ஒரு நல்ல படம் பார்ப்பது அல்லது உங்களின் நெருங்கிய நண்பருடன் பேசுவது போன்ற செயல்கள் உங்களுக்கு சந்தோஷத்தை தரும் என்று நீங்கள் நினைத்தால், தயவு செய்து அதை செய்யுங்கள். என்ன தான் நாம் [illegible] தொற்று நோய்க்கு நடுவில் இருந்தாலும், நாம் விரும்பும் காரியங்களைச் செய்வதில் இருந்து நம்மை அவை தடுக்க போவதில்லை.

போதுமான தூக்கத்தை பெறு[illegible]

போதுமான தூக்கம், ஒரு நல்ல உடல் நல[illegible] ஆரோக்கியத்தை உறுதி செய்கிறது. மேல[illegible] நம் உடல் செயல்பாட்டிற்கு போதுமான தூக்கம் மிகவும் அவசியமான ஒன்றாகும். நீங்கள் அதைப் பெறாதபோது, நீங்கள் அதிக எரிச்சலையும் உணர்ச்சியையும் உணர முனைகிறீர்கள். பொதுவாகவே, நம் அனைவருக்கும் தினசரி 7 முதல் 8 மணி நேரம் வரை தூக்கம் தேவை. இது உங்கள் மனதைப் புதுப்பிக்க உதவுகிறது. மேலும், உங்கள் வேலைகளில் நீங்கள் திறமையாக செயல்ப[illegible]ம், உங்களை உ[illegible]சாகமாக வைத்துக் [illegible]கொள்[illegible]வும் இது [illegible]ரிய அள வில் உத[illegible]கிறது. மேலும், [illegible] போதுமான ஓய்வு பெ[illegible]மே நல்லது.

